உ

திருச்செந்திலாண்டவன் துணை

போற்றிப் பஃறொடை

(தெளிவுரையுடன்)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-ஆவது அதிபர்
"கயிலைமாமுனிவர்"
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம் வெளியிடப் பெற்றது.

1993

பதிப்பாசிரியர் :

தருமபுர ஆதீனப் புலவர்
சைவப்புலவர்
தொல்காப்பியச்செல்வர் சித்தாந்த நன்மணி பண்டித வித்துவான்
பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,
ஒய்வுபெற்ற முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி,
திருப்பனந்தாள்.

ஸ்ரீ காசிமடம்] [திருப்பனந்தாள்

மூன்றும் பதிப்பு
பிரதிகள் 1000

பொருளடக்கம்

ஸ்ரீ குமரகுருபரர் அச்சகம்
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்

முன் பதிப்பின் பதிப்புரை

வைச்ச பொருள் நமக்காகும் என்றெண்ணி நமச்சிவாய
அச்சம் ஒழிந்தேன் அணிதில்லை யம்பலத்துள் ஆடுகின்ற
பிச்சன் பிறப்பிலிபேர் நந்தி உந்தியின்மேல் அசைத்த
கச்சின் அழகு கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே

மெய்கண்ட நூல்கள் பதினான்கு என்ப. அவற்றில் ஒன்று இப்போற்றிப் பஃறொடை ஆகும். திருவருளையும் குருவருளையும் நினைந்து நினைந்து போற்றி உரைக்கப் படுதலானும், பஃறொடை வெண்பாவால் அமைந்துள்ளமையானும் இந்நூல் போற்றிப் பஃறொடை என்னும் பெயர் பெற்றது.

இந்நூற்கமைந்த பழையவுரை ஒன்று உள்ளது. அவ்வுரை தெளிவாக அமைந்துள்ளது. எனினும் அதன் ஆசிரியர்காலம் முதலியன அறிய இயன்றிலது. இவ்வுரைக்குப் பின் அவ்வப் பொழுது அறிஞர் பெருமக்களால் உரை எழுதப்பட்டுள்ளன. அத்தகைய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் தமிழ்ச் சைவ உலகம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. இந்நூற்கமைந்த தெளிவுரை உரிய விளக்கங்களுடன் அமைந்துள்ளது. நூற்கருத்தை உணரும் முகமாக ஆராய்ச்சி முன்னுரை ஒன்றும் தரப்பெற்றுள்ளது.

மெய்கண்ட நூல்கள் பதினான்கும் தெளிவான விளக்கவுரையுடன் வெளிவர வேண்டுமென்பது திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் அதிபராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் திருவுள்ளமாகும். அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் இந்நூல் வெளிவருகின்றது. இவ்வாறு நன்னெறிப்படுத்தி ஆட்கொண்டருளும் திருவருளுக்கும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பனந்தாள் கு. சுந்தரமூர்த்தி
10 - 8 - 93 ஓய்வு பெற்ற முதல்வர்

ஆராய்ச்சி முன்னுரை

சந்தான குரவர் நால்வரில் உமாபதிசிவம் நான்காமவராக விளங்குபவராவர். மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் எட்டு நூல்களை அருளிய பெருமை இவருக்கு உண்டு. அந்நூல்களுள் போற்றிப் பஃறொடை என்பது ஒன்றாகும்.

பா வகைகளுள் பஃறொடை வெண்பா என்பது ஒன்றாகும். தொடை என்பது இரண்டு அடிகள் அமையக் கூறுவதோர் யாப்பமைதி ஆகும். இவ்வாறு பல இரண்டடிகளில் கொண்ட பாவகையைப் பஃறொடை என்பர். கால எல்லைக்கு அப்பாற் பட்டு விளங்கும் இறைவன் உயிர்களின் தகுதிக்கேற்ப அருள் நலத்தை வழங்கியருளுவன். இறைவனே தமக்குக் குருவாக வந்தருளி ஆட்கொண்டான் என்பதையும், அவ்வாறு ஆட் கொண்டருளிய திறம் படிப்படியாக எண்ணிப் போற்றற்குரிய தொன்று என்பதையும் ஆசிரியர் இந்நூற்கண் நுவலுகின்றார். தனி நிலையிலிருந்த உயிர், கட்டு நிலைக்கு ஆளாகியும், அதன் பின் தூய நிலைக்கு ஆளாகியும் விளங்கும் திறனும், அவ்வவ் நிலையிலும் இறைவன் ஆற்றி வரும் பேருதவியும் தெளிவாக இந்நூற்கண் கூறப்பட்டுள்ளது.

நுவலும் பொருள்:

உய்விக்கும் ஆடல்:

மாலும், அயனும், மற்றுள்ள தேவர்களும், மாமறைகளும், தத்துவக் கூறுகளும் தத்தமக்குரிய அறிவின் எல்லையில் சென்று தேடவும் காண்டற்கரியனாய் விளங்கும் இறைவன், திருச்சிற்றம் பலத்துள் நிறைந்து உயிர்கட்கு உற்ற பிறப்பினை அறுத்தற்கு ஆடல் புரிகின்றான். அவ்வாடல் கருணைக்கு வணக்கம்.

ஐந்தொழில் அமைவு :

பல்வேறு வகைப்பட்ட உயிர்களைப் படைத்தும், காத்தும் இளைப்பாறுதற் பொருட்டு ஒடுக்கியும், வினைப்பயன் நுகரும் பொருட்டு மறைத்தும், உய்தி பெறுதற்குரிய தகுதி பெற்ற நிலையில் வீடுபேற்றை வழங்கியும் இறைவன் அருளுவன். முதல் இடை கடை என்று அளவிடுதற்கரிய பெருமான் செய்தருளும் இப் பெருநெறிக்கு வணக்கம்.

3-1

தனி நிலையும் கட்டு நிலையும் :

நெல்லினிடத்து உமியும் நிகழ் செம்பினிடத்துக் களிம்பும் இயல்பாகவே அமைந்து கிடப்பன. அவற்றைப் போன்றே உயிரிடத்தும் ஆணவம் அமைந்துள்ளது. தனி நிலையில் உயிர் கண்ணில்லாக் குழவியைப் போல் ஒன்றும் அறியாது மயங்கி ஆணவ மலத்தோடு கட்டுண்டு நிற்கும். இந்நிலையை மாற்றி உடல் கருவி உலகு முதலியவற்றைக் கொடுத்து மனம், மொழி, மெய்களால் இயற்றப்படும் வினைப் பயனையும் நுகருமாறு செய்தருளுவன் இறைவன். இவ்வாறு தகுதி உயர்வளிக்கும் இறைவனின் தனிப்பெரும் கருணைக்கு வணக்கம்.

தாயும் சேயும் :

உயிர் செய்த வினைப் பயனுக்கேற்பப் பிறவியை வழங்குபவன் இறைவன். தாய் தந்தையரின் இன்ப நுகர்வின் வாயிலாகத் தாய் வயிற்றில் கரு உதிக்கும். அக்கரு வளர்ச்சி யுறுங்காறும் வயிற்றினுள் கிடக்கும் பிறபுழுக்கள் உண்ணுதவாறு காத்தருளியும், பத்துத் திங்களுக்குள் கை கால் முதலிய உறுப்புக்களை வழங்கியும், வந்த சிறிய வழியைப் பெரிதாக்கித் தாய்க்கும் சேய்க்கும் ஊறு நேராத வண்ணம் குழவியாய் வெளி வரக் கருணை புரிபவன் இறைவன். அக்கருணைப் பெருக்கிற்கு வணக்கம்.

பால் உணவும் பற்றும் :

தாயிடத்துக் கருவாக வளரும் நிலையில் உருவாய அறிவு, நிலவுலகில் பிறந்தபின் மாறும். நலந் தீங்கு அறியாது மயங்கும். அந்நிலையில் அதற்கு உளதாய பசியைப் பிறர் அறியுமாறு அழச் செய்தும், அதுகேட்ட தாய்க்கு மனமுருக அவள் மார்பகத்தில் பால் பெருகுமாறு செய்தும், அதனைவழித் தாய்க்கும் சேய்க்கும் உளதாய பற்றுப்பெருகுமாறுசெய்தும் காத்தருளுவன் இறைவன். அவ்வருளுக்கு வணக்கம்.

வளரும் நிலையில் வழங்கும் உதவி :

இவ்வாறு வளரும் இளங்குழவிப் பருவத்தும், இளமைப் பருவத்தும், மேலும் வளரும் மக்கட் பருவத்தும் படிப்படியாக அறிவு பெருகுமாறு செய்து உடனின்று உதவுவன் இறைவன். அப்பேருதவிக்கு வணக்கம்.

உடல்வழிப் பெறும் உணர்வு :

இழிவுமிக்க தசைத் திரளால் ஆயதுஇவ்வுடல். உயிர் இதனையே தனக்குரிய வீடாகக் கொண்டு வாழுகின்றது. மூலாதாரமாகிய நுண்ணிய அறையில் கிடந்த உயிர் ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடக்கும். காலம் நியதி முதலிய தத்துவக் கூட்டுக்களால் அவ்வறையினின்றும் உந்தியாகிய அறைக்கு வரும். கலைவித்தை முதலிய கூட்டுக்களால் அவ்வறையினின்றும் மேலேறி நெஞ்சிற்கு வரும். அந்நிலையில் சிந்திக்கும் திறம் பெற்று அவ்வறையினின்றும் மேலேறி கழுத்திற்கு வரும். இவ்வறையில் கனவினுல் வினைப்பயனை நுகரும். அதன்பின் அவ்வறையினின்றும் மேலேறி அறிவுப்பொறி வினைப்பொறி முதலிய பொறிகளனைத்தும் கூடநெற்றியாகிய அறையின்கண் விளங்கும். இவ்வாறு மேன்மேல் எழவும் எழுந்தவாறே பின் அடங்கவும் உயிர் போக்கு வரவு புரிதற்கு அறவடிவாகிய இறைவனே காரணமாவன். அவ்வருள் திறத்திற்கு வணக்கம்.

கணக்கெழுதும் கருணை :

இறையருளை நினையாது தனக்குற்றபசித்தீயைத்தணித்தற்குப் பல்வேறு தொழில்களை உயிர்கள் செய்து வருகின்றன. அவ்வகையில் பழவினை, நுகர்வினை, வருவினை ஆகிய மூன்றும் மாறி மாறி வருகின்றன. இவ்வாறு உயிர்கள் செய்யும் வினைப்பயன் அவற்றிற்கு நெறி திறம்பாது எய்தவும், மேன் மேல் வரும் பிறப்பின் வழி அவற்றைக் கெடுக்கவும் ஒழுங்கான கணக்கை எழுதி வருபவன் இறைவன், அவ்வரிய முறைமைக்கு வணக்கம்.

மறக்கருணை ;

உயிர் உடலொடு கூடிச் செய்த வினைப் பயனுக்கு ஏற்ப வாழ்வளிப்பதுடன் அவ்வாழ்வு முடிந்துழி அது செய்த நல்வினைக் கேற்ப இந்திரன் முதலிய இறையவர் பதங்களை வழங்கியும், தீவினைக்கேற்ப இரும்புத் தூணைப் பற்றச் செய்தல் முதலிய துன்ப நுகர்வைக் கொடுத்தும், அண்ணுத்தல் செய்யாத அருநரகில் உய்ப்பித்தும் அருளுவன். வினை நீக்கம் பெறச் செய்யும் இத்தகைய அருள் தன்மையை மறக்கருணை என்பர். அக்கருணைப் பெருக்கிற்கு வணக்கம்.

அருட் பதிவு :

வினைப் பயனுக்கேற்ப இவ்வாறு பல பிறப்புக்களையும் துன்பங்களையும் அடைந்த உயிர் சலிப்புற்றுக் களைப்புற்றுத் திருவருளை நாடும். அந்நிலையில் நற்சூழல அமைந்த இடத்தில், திருவருளை அணுகும் உயர் குடிப்பிறப்பில் அத்தகைய உயிரைச் செலுத்துவன் இறைவன். அந்நிலையில் அவ்வுயிர் இன்பத்துள் இன்பம் விழையாமலும், துன்பத்துள் துன்பம் உறுதலும் திருவருள் ஒன்றையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழும் நிலை எய்தும். இந் நிலையுண்டாகவே திருவருள் உணர்வு மீதூரும். அது பொழுது தன் அருட்பதிவைச் செய்து ஆட்கொள்ளும் பெருந்தகைமைக்கு வணக்கம்.

குருவாய் வருதல் :

உயிர்களை மூவகைப் படுத்துவர். முதல் வகையினராகிய விஞ்ஞானகலர்க்கு இறைவன் உள்நின்று அருளுவன். இரண்டாம் வகையினராகிய பிரளயாகலர்க்குத் தெய்வத் திருவுருவில் நின்று முன் நின்று அருளுவன். மூன்றும் வகையினராகிய சகலர்க்கு அவரனைய வடிவு கொண்டு குருவாகி வந்தருளுவன். இவ் வகையில் எனக்கு மணிமிடறும், உமையொரு கூறுயவடிவும், பவள நிறம் பொருந்திய திருச்சடையும், கங்கையும், பிறையும், பாம்பும். நெற்றிக்கண்ணும், உடுக்கையும், புலித்தோலும் திருச்சிலம்பும், வீரக்கழலும் உடைய இறைவனே மறைஞான சம்பந்தர் என்னும் பெயரில் குருவாக எழுந்தருளினன். அவன் அருள் தன்மைக்கு வணக்கம்.

குருவருள் :

இவ்வாறு எழுந்தருளிய குருமுதல்வர் சைவமாம் சமயம் சாரும் அறிவு தந்து, சமயம், விசேடம் முதலிய தீக்கைகளைச் செய்தருளி, ஆசிரியனாகத் தலைமை ஏற்றற்குரிய திருமுழுக்கும் ஆட்டி, திருக்கண் நோக்காலும், திருக்கரங்களாலும், திருவுளப் பாங்காலும், திருவடிகளாலும் தன் அருட்பேற்றை வழங்கி யருளினன். அவ்வருட் பண்பிற்கு வணக்கம்.

வழங்கிய ஞானம் :

புறவழிபாடு, அகவழிபாடு, ஒன்றி உணர்தல் ஆகிய வழி பாட்டு நெறிகளின் பயனாகப் பத முத்திகளை வழங்கியருளிய

ஆசிரியன். அவற்றின் மேலாய ஞான நெறியை யும் வழங்கியருளி இணையார் திருவடிகளை என் தலைமேல் சூட்டி யருளினன். அதன் பயனுகத் தான் வேறு நான் வேறு எனும் வழக்கின்மை காட்டி உரிமையும் பெருமையும் கொடுத்தருளினன். அத்தகைய கருணைக்கு வணக்கம்.

மூவகை நிலையிலும் வழங்கிய உதவி :

உருத் தெரியாக் காலத்தே உள் புகுந்து உளம் மன்னிக் கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினல் ஆண்டு கொண்ட திறம் நினையுந்தொறும் நெகிழ்தற்குரியது. தூய நிலையை உருவாக்கி உதவிய இறைவனே, முன்னைய தனிநிலை, கட்டு நிலையிலும் உதவி அருளினன் என்பதை நினைய உள்ளம் துணுக்குறும். அவ்வருள் பேற்றிற்கு வணக்கம்.

புக்கில் அருளிய புனிதன் :

பிற பிற சமய நெறிகளில் சென்று பேதுறமல் சிவனடியைச் சேருவதே முத்திப் பேறு எனக் கூறும் சைவ நெறியைச் சாரவும், அதன் பயனுக மற்று ஈண்டு வாரா நெறி பெற்று இறைவனுடைய திருவடியையே புகுமிடமாகக் கொண்டு பேரின்பப்பெருவாழ்வை அடையவும் காத்த முன்னேனை எவ்வாறு போற்றி உரைப்பேன்.

உவமைகள் :

இவ்வாசிரியர் இந்நூற்கண் உவமைகள் மூலம் பல அரிய கருத்துக்களை விளக்கியுள்ளார். அவற்றுள் சில முன்னைய ஆசிரியர்களாலும் குறிக்கப்பட்டன எனினும் இவர் எடுத்தாளும் முறை மேலும் மெருகு தருமாறு அமைந்துள்ளது.

1. நெல்லுக்கு உமி :

நெல்லிடத்து இருக்கும் உமியும் தவிடும் முளையும் ஒன்று தோன்றிய பின் ஒன்று தோன்றியதன்று. அனைத்தும் ஒருங்கு தோன்றியன. அதைப் போன்றே உயிரிடத்தும் ஆணவம் ஒருங்கு அமைந்ததாம்.

2. செம்பில் களிம்பு :

செம்பின் நிறத்தைக் களிம்பு மறைத்து நிற்கும். அதைப் போன்றே உயிரது அறிவை ஆணவம் மறைத்து நிற்கும்.

3. கடலில் உப்பு :

கடல் என்பது நீரை அடக்கி நிற்கும் பெரு வெளியாம். அங்குத் தோன்றிய உப்புத் தன்மை அவ்வெளியைப் பற்றாது நீரையே பற்றி நிற்கும். அதைப் போன்றே இறைவனின் அருள் வெளியில் உயிர் இருப்பினும் அதனொடு உளதாய ஆணவம் இறைவனைப் பற்றாது உயிரைப் பற்றி நிற்கும்.

4. 5 மாமணியை அடக்கி நிற்கும் மாநாகம், நெருப்பை அடக்கி நிற்கும் விறகு :

சிறந்த மணியைப் பாம்பு தன் வாயுள் அடக்கி மறைத்து நிற்பது போலவும், நெருப்பை மறைத்து நிற்கும் விறகைப் போலவும் உயிரின் அறிவை ஆணவம் மறைத்து நிற்கும்.

6. குருடர்க்குக் கொடுத்த கோல் :

குருடர்க்குக் கண்ணொளி இன்மையால் தோன்றும் இடர்ப் பாட்டை ஒராற்றான் அவருக்குக் கொடுக்கப்பட்ட கோல் நீக்கும். அதைப் போன்றே உயிர்க்கு வினைப் பயனால் தோன்றும் இடர்ப் பாட்டை ஒராற்றான் அதற்குக் கொடுக்கப்பட்ட உடம்பு நீக்கும். உயிரை வளர்த்தற்கு உடல் கருவியாய் நிற்றலின் இவ்வாறு கூறப்பட்டது. "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்னும் திருமுறையும்.

7. புல்நுனியில் திவலை :

புல் நுனியில் தங்கும் நீர்த்திவலை சிறிதாதல் போலத் தாய் வயிற்றில் புகும் கருவும் சிறிதாகும்.

8. இருள் நீக்கும் சுடர் :

இருளை நீக்கும் விளக்கைப் போல நனவு நிலை உயிர்க்கு உடல் கருவி நுகர்வு ஆகியவற்றை நன்கு உணரும் நிலையை உண்டாக்கும்.

9. 10 பெற்றோர் தம் மகவுக்கு உற்ற வருத்தத்தை நீக்குவது : மனுவரசன் தன் மகற்குற்ற வருத்தத்தை நீக்கியது :

பெற்றோர் தம் குழந்தைக்குற்ற நோயைத் தீர்த்தற்கு உடலில் ஒருமருங்கு சுடநேரினும், அறுக்க நேரினும், ஒளி பெறுதற்காகக் கண் படலத்தை உரிக்க நேரினும் தயங்குவதில்லை. மாறாக

அவ்வினை களைச் செய்யும் மருத்துவர்க்கு மனமகிழ்ந்து பொருளை வழங்கவும் செய்வர். காரணம் தம்மகவுக்கு உற்ற நோய் அவ்வவ் வினைகளால் நீங்குதலினாலேயாம். அதைப் போன்றே இறைவனும் தீவினை வயப்பட்ட உயிரைப் பல்வேறு நிரயத் துன்பங்களில் இயமதூதுவர்களைக் கொண்டு ஒறுக்கத் தயங்குவதில்லை. காரணம் உயிர் அவற்றான் பெறும் நன்மை கருதியாம். மனுவரசன் ஒரு மைந்தன் தன் குலத்துக்குள்ளான் என்பதையும் கருதாது தன் தேர்க்காலில் அவன் உடல் படத் தடிந்தனன். காரணம் ஆன்கன்றைக் கொன்ற பாவம் அதன் வழி நீங்கும் என்பதாலாம். அதைப் போன்றே இறைவனும் தீவினை வயப்பட்ட உயிரை அருநரகங்களில் செலுத்தி ஒறுப்பதும் அவற்றின் வினைப்பயன் நீங்கவேயாம். 'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார் நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்' எனவரும் அப்பரடிகளின் வாக்கும் நினைதற்குரியது.

சமயங்கள் :

வீட்டு நெறிக்கு ஆளாக்காத சமயங்களை மிண்டாய ஆறு சமயம் எனக் குறிக்கின்றார். மாயாவாதிகள், சிவசமவாதிகள் ஆகியோரின் நெறிகள் உய்தி பெறுதற்கு உரியவல்ல எனக் குறிக்கின்றார்.

உ

போற்றிப் பஃறொடை

1 பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்பன் — நாமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கம்செய் விந்துவுடன்
நாதம்நா தாந்தம் நடுவேதம் — போதத்தால்
ஆம் அளவும் தேட அளவிறந்த அப்பாலைச்
சேம ஒளிஎவருந் தேறும்வகை — மாமணிசூழ்
மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி — குன்றாத

5 பல்லுயிர்வெவ் வேறு படைத்தும் அவைகாத்தும்
எல்லை இளைப்பொழிய விட்டுவைத்தும் - தொல்லையுறும்
அந்தம் அடிநடுஎன்று எண்ண அளவிறந்து
வந்த பெரிய வழிபோற்றி - முந்துற்ற

6 நெல்லுக்கு உமிதவிடு நீடுசெம்பில் காளிதமும்
தொல்லைக் கடல்தோன்றத் தோன்றவரும் - எல்லாம்
ஒருபுடை யொப்பாய்த்தான் உள்ளவா றுண்டாய்
அருவமாய் எவ்வுயிரும் ஆர்த்தே - உருவுடைய
தான்அடக்கும் காட்டத் தகுதியும்போல் - ஞானத்தின்
மாமணியை உள்ளடக்கும் மாநாகம் வன்னிதனைத்
கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல்மாண்ட எவ்வுயிர்க்கும் - உள்நாடிக்
கட்புலனல் காணார்தம் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பால்
தனுகரண மும்புவன மும்தந்து அவற்றால்
மனமுதலால் வந்தவிகா ரத்தால் - வினையிரண்டும்
காட்டி அதனாற் பிறப்பாக்கிக் கைக்கொண்டும்
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி - நாட்டுகின்ற

13 எப்பிறப்பும் முற்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துள் - கர்ப்பமாய்ப்
புல்லிற் பனிபோற் புகுந்திவலைக்(கு) உட்படுங்கால்
எல்லைப் படாஉதரத்(து) ஈண்டியதீப் - பல்வகையால்
அங்கே கிடந்த அநாதிஉயிர் தம்பசியால்
எங்கேனுமாக எடுக்குமென - வெங்கும்பிக்

காயக் கருக்குழியில் காத்திருந்தும் காமியத்துக்(கு)
ஏயக்கை கால்முதலாம் எவ்வுறுப்பும் - ஆசறவே
செய்து திருத்திப்பின் புயோகிருத்தி முன்புக்க
ஐயவழி யேகொண்(டு) அணைகின்ற - பொய்யாத
வல்லபமே போற்றிஅம் மாயக்கால் தான்மறைப்ப

18 நல்ல அறிவொழிந்து நன்குதீ - தொல்லையுரு
அக்காலந் தன்னிற் பசியை அறி வித்(து) அழுவித்(து)
உக்காவி சோரத்தாம் உள் நடுங்கி - மிக்குஓங்கும்
சிந்தை உருக முலையுருகுந் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப் பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த
பாசப் பெருங்கயிற்றாற் பல்லுயிரும் பாலிக்க
தேசத்தை வைத்த நெறிபோற்றி - ஆசு அற்ற

22 பாலைப் பசும்பதத்தும் பாலனும் அப்பதத்தும்
நாளுக்கு நாள்சகல ஞானத்து - மூள்வித்துக்
கொண்டாள ஆளக் கருவிகொடுத்(து) ஒக்கநின்று
பண்டாரியான படி போற்றி - தண்டாத

25 புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமணையில்
அன்புசேர் கின்றன கட்டுஐந்தாக்கி - முன்புள்ள
உண்மை நிலைமை ஒருகால் அகலாது
திண்மை மலத்தால் சிறையாக்கிக் - கண்மறைத்து
மூல அருங்கட்டில் உயிர்மூடமாய் உள்கிடப்பக்
காலம் நியதி அது காட்டி - மேல்ஓங்கும்
உந்திவியன் கட்டில் உயிர்சேர்த்துங் கலைவித்தை
அந்த அராகம் அவைமுன்பு - தந்த
தொழில் அறிவு இச்சை துணையாக மானின்
எழிலுடைய முக்குணமும் எய்தி - மருளோடு
மன்னும் இதயத்தில் சித்தத்தால் கண்ட பொருள்
இன்ன பொருள்என்று இயம்ப வொண்ணு -அந்நிலைபோய்க்
கண்டவியன் கட்டில் கருவிகள் ஈர்ஐந்தொழியக்
கொண்டுநிய மித்துஅற்றை நாள்கொடுப்பப் - பண்டை
இருவினையால் முன்புள்ள இன்பத்துன் பங்கள்
மருவும்வகை அங்கே மருவி - உருவுடன்நின்று
ஓங்கு நுதலாய ஓலக்க மண்டபத்தில்
போங்கருவி யெல்லாம் புகுந்துஊண்டி - நீங்காத
முன்னை மலத்து இருள் உள் மூடா வகையகத்துள்
துன்னும் இருள் நீக்கும் சுடரேபோல் - அந்நிலையே

தூக்கம் சுடர்உருவிற் பெய்து தொழிற்கு உரியர்
ஆக்கிப் பணித்த அறம்போற்றி - வேட்கைமிகும்

35 உண்டிப் பொருட்டால் ஒருகால் அவியாது
மண்டிஎரியும் பெருந்தீ மாற்றுதற்குத் - திண்திறல்சேர்
வல்லார்கள் வல்ல வகையால் தொழில் புரிதல்
எல்லாம் உடனே ஒருங்கிசைந்து - சொல்காலை
மூட்டாமற் செய்வினைக்கும் முன்செய்வினைக் கும்செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி - நட்டுஓங்கும்

38 இந்நிலைமை மானுடருக்கே யன்றி எண்ணிலா
மன்னுயிர்க்கும் இந்த வழக்கேயாய் - முன்னுடைய
நாள்நாள் வரையில் உடல்பிரித்து நல்வினைக்கண்
வாழ்நாளின் மாலாய் அயனுகி - நீள்நாகா
வானுடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானு விதத்தால் நலம்பெறுநாள் - தான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம் வெங்குருவின் பால்காட்ட - இற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை என்றெடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச் - சொல்லி இவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்து வீர்என்று
வெய்துற்று உரைக்க விடைகொண்டு - மையல்தரும்
செக்கினிடைத்திரித்தும் தீவாயில் இட்டெரித்தும்
தக்கநெருப் புத்தூண் தழுவு வித்தும் - மிக்கு ஓங்கும்
நாராசம் காய்ச்சிச் செவிமடுத்தும் நாஅரிந்தும்
ஈராஉன் ஊனைத்தின் என்றடித்தும் - பேராமல்
அங்குஆழ் நரகத்து அழுத்துவித்தும் பின்னும்தம்
வெங்கோபம் மாருத வேட்கையராய் - இங்கொருநாள்
எண்ணிமுதற் காணுத இன்னல் கடுநரகம்
பன்னெடுநாள் செல்லும் பணிகொண்டு - முன் நாடிக்
கண்டுகடன் கழித்தல் காரியமாம் என்றுஎண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் - மண்டுஎரியில்
காய்ச்சிச் சுடஅறுக்க கண்உரிக்க நல்நிதியம்
ஈய்த்துத்தாய் தந்தைதமர் இன்புறுதல் - வாய்த்தநெறி
ஓடிய தேரின்கீழ் உயிர்போன கன்றுலே
நீடுபெரும் பாவம் இன்றே நீங்கும்என - நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சு அனைய சிந்தை நமன்தூதர் - வெஞ்சினத்தால்

அல்லல் உறுத்தும் அருநரகம் கண்டு நிற்க
வல்ல கருணை மறம்போற்றி - பல்லுயிர்க்கும்

58 இன்ன வகையால் இருவினைக்கண் நின்று அருத்தி
முன்னை முதல்என்ன முதிலில்லோன் - நல்வினைக்கண்
எல்லா உலகும் எடுப்புண்டு எடுப்புண்டு
செல்காலம் பின்நரகம் சேராமே - நல்லநெறி
எய்துவதோர் காலத் தன் அன்பரைக்கண்டு இன்புறுதல்
உய்யும் நெறிசிறிதே உண்டாக்கிப் - பையவே
மட்டாய் மலராய் வருநாளில் முன்னை நாள்
மொட்டாய் உருவாம் முறைபோலக் - கிட்டியதோர்
நல்ல பிறப்பில் பிறப்பித்து நாடும்வினை
எல்லை யிரண்டும் இடையொப்பில் - பல்பிறவி
அத்தமதில் அன்றே அளவென்று பார்த்திருந்து
சத்தி பதிக்கும் தரம்போற்றி - முத்திதரு

59 நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின்று அறுத்தருளிப் - பின அன்பு
மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்தருளிப் - பூவலயம்
தன்னின்று நீங்காச் சகலர்க்கு அவர்போல
முன்நின்று மும்மலம் தீர்த்து ஆட்கொள்கை-அன்னவனுக்கு
ஆதிகுண மாதலினல் ஆடுந் திருத்தொழிலும்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் - பாதியாம்
பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும் - அச்சம்அற
ஆடும் அரவும் அழகார் திருநுதல்மேல்
நீடுருவ வன்னி நெடுங்கண்ணும் - கேடில்லயம்
கூட்டும் தமருகமும் கோல எரியகலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும் - வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுந்தாளி னும்அடியார்
உள்ளத்தி னும்பிரியா ஒண்சிலம்பும் - கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலும்
ஒன்றும்உருத் தோன்றமல் உள்ளடக்கி - என்றும்
இறவாது இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து - நறவாரும்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதன்என்று
பேரிலா நாதன்ஒரு பேர்புனைந்து - பாரோர்தம்

உண்டி உறக்கம் பயம்இன்பம் ஒத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி - மிண்டாய

71 ஆறுசமயப் பொருளும் அறிவித்து அவற்றில்
பேறு இன்மை எங்களுக்கே பேசுக்கித் - தேறுந
சித்தம் தெளியத் திருமேனி கொண்டுவரும்
அத்தகைமை தானே அமையாமல் - வித்தகமாம்
சைவ நெறிப்பேற் சமய முதலாக
எய்தும் அபிடேகம் எய்துவித்துச் - செய்யதிருக்
கண்ணருளால் நோக்கிக் கடியபிறப் பாற்பட்ட
புண்ணும் இருவினையும் போய்அகல - வண்ணமலர்க்
கைத்தலத்தை வைத்தருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை யெல்லாம் விரித்தோதி - ஒத்தொழுகும்
சேண் ஆர் இருள்வடிவும் செங்கதிரோன் பால்நிற்பக்
காணாது ஒழியும் கணக்கேபோல் - ஆணவத்தின்
ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலைபோற்றி - மேதக்கோர்

73 செய்யும் சரியை திகழ்கிரியா யோகத்தால்
எய்துஞ்சீர் முத்திபதம் எய்துவித்து - மெய்யன்பால்
காணத் தகுவார்கள் கண்டால் தமைப்பின்பு
நாணத் தகும்ஞான நன்னெறியை - வீணே
எனக்குத் தரவேண்டி எல்லாப் பொருட்கும்
மனக்கும் மலரயன் மால்வானோர் - நினைப்பினுக்குந்
தூரம்போலே அணிய சுந்தரத்தாள் என்தலைமேல்
ஆரும்படி தந்து அருள்செய்த - பேராளன்
தத்தபொருள் ஏதென்னில் தான்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி - முந்தினந்தன்
உள்ளம் என்றும் நீங்காது ஒளித்திருந்து தோன்றிநிற்கும்
கள்ளம் இன்றுகாட்டும் கழல் போற்றி - வள்ளமையால்

84 தன்னைத் தெளிவித்துத் தன்தாளின் உட்கிடந்த
என்னைத் தெரிவித்த எல்லையின்கண் - மின்ஆரும்
வண்ணம் உருவம் மருவும் குணமயக்கம்
எண்ணும் கலைகாலம் எப்பொருளும் - முன்னாம் எனக்கு
இல்லாமை காட்டிப் பின்பு எய்தியவா காட்டி இனிச்
செல்லாமை காட்டும் செயல் போற்றி - எல்லாம் போய்த்

87 தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருள் ஆகி
எம்மைப் புறம்கூறி இன்புற்றுச் - செம்மை
அவிகாரம் பேசும் அகம்பிரமக் காரர்
வெளியாம் இருளில் விடாதே - ஒளியாய் நீ
நின்ற நிலையே நிகழ்த்தி ஒருபொருள் வேறு
இன்றியமை யாமை எடுத்து ஓதி - ஒன்ருகச்
சாதித்துத் தம்மைச் சிவமாக்கி இப்பிறவிப்
பேதம் தனில் இன்பப் பேதம்உறுப் - பாதகரோடு
ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்தும் காட்சிதந்து
போகமாம் பொன்தாளின் உள்புணர்த்தி - ஆதியுடன்
நிற்க அழியா நிலை இதுவே என்றருளி
ஒக்க வியாபகம்தன் உள்காட்டி - மிக்கோங்கும்
ஆனந்த மாக்கடலில் ஆரா அமுதுஅளித்துத்
தான்வந்து செய்யும் தகுதியினுல் - ஊன்உயிர்தான்
மூன்கண்ட காலத்தும் நீங்காத முன்னேனை
என்கொண்டு போற்றிசைப்பேன் யான்.

போற்றிப் பஃறொடை

(1) பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்பன்—நாமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கம்செய் விந்துவுடன்
நாதம்நா தாந்தம் நடுவேதம்—போதத்தால்
ஆம்அளவும் தேட அளவிறந்த அப்பாலைச்
சேம ஒளிஎவருந் தேறும்வகை — மாமணிசூழ்
மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி.

(தெ-ரை) பொற்றாமரையில் நிலைபெற்ற நான்கு முகத்துடன் விளங்குகின்ற பிரமனும், தேவர்களும், அவர்களுக்குத் தலைவனாக விளங்கும் இந்திரனும், திருமகள் இலங்கும் மார்பில் ஒளிமிக்க கௌஸ்துவமணியை அணிந்திருக்கும் திருமாலும், நாவிலிருந்து சொல்லப்படுகின்ற வேதங்களும், அவற்றின் முடிவாக விளங்கும் உபநிடதங்களும், அறிவு விளக்கம் தரும் விந்துவும், அதற்கு உள்ளொளியாய் விளங்கும் நாதமும், அதன் முடிவாக விளங்கும் சிவதத்துவமும் தம் இதயத்திடத்தே தோன்றும் அறிவு கொண்டு இயன்றளவும் தேட, அவற்றிற்கு அப்பாற்பட்டதாய், உயிர்க்குப் பாதுகாப்பாக விளங்கும் இறை, உயிர்களை உய்விக்க வேண்டுமென்னும் கருணை கொண்டு தன்னை வணங்குபவர் எவர்க்கும் பேரின்பம் வழங்குதற்கெனச் சிறந்த மணிகளால் இழைக்கப் பெற்ற அழகிய திருச்சிற்றம்பலத்தில் ஒளி நிறைந்து உயிர்களுடைய பிறவிப்பிணி அறுமாறு நிலைபெற்ற ஆடலைச் செய்யும் நிலைக்கு வணக்கம்.

மணி-கௌஸ்துவமணி. எழுதாக் கிளவியாதலின் நாமன்னும் வேதம் என்றார். விந்து அனைத்துயிர்களுக்கும் உண்டாகிய தொழிலை எழுப்புவித்து நிற்கும் செயல். நாதம்- அனைத்துயிர்களுக்கும் அறிவை எழுப்புவித்து நிற்கும் பேரறிவு. நாதாந்தம்- சிவதத்துவம், இவை இறைவனின் ஒரு கூறாக விளங்குதலின் அப்பெருமானை முற்ற அறிதற்கு இயலாவாயின. போதத்தால் -

தும் அறிலசல். சேபஒளி - உயிர்கட்கு மலப்பிணிப் பகர்நி அதற்குப் பாதுகாவலைத் தரும் ஒளி; இறை. பெருமானின திருக்கூத்து ஐந்தொழில் இயற்றும் சிறப்புடையது. அவ்வைந்தும் உயிர்கட்குப் பிறவிப் பிணிக்கு மருந்தாய் அமைதலின் 'பிறவி வழக்கறுத்த நிருத்தம்' என்றார். 'ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில், நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம். அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடலிது, பெற்றார் பிறப்பற்றார் பின்' 'தோற்றம் துடியதனில் தோயும்திதி அமைப்பில் சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமா, ஊன்று மலர்ப் பதத்தில் உற்ற திரோதம்முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு' 'மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டு மலம், சாய அமுக்கி அருள் தானெடுத்து-நேயத்தால்,ஆனந்தவாரிதியில் ஆன்மாவை தானழுத்தல், தானெந்தை யார்பரதம் தான்' எனவரும் உண்மை விளக்கப் பாடல்கள் பெருமானின் ஆடல், உயிர்களின் பிறவி யறுத்தற்குக் காரணமாதலை விளக்கும்.

(5) — குன்றுத

பல்லுயிர்வெவ் வேறு படைத்தும் அவைகாத்தும்
எல்லை இளைப்பொழிய விட்டுவைத்தும் - தொல்லையுறும்
அந்தம் அடிநடுஎன்று எண்ண அளவிறந்து
வந்த பெரிய வழிபோற்றி.

(தெ-ரை) அளவிறந்த உயிர்களை அவற்றின் வினைக்கீடாக வெவ்வேறு வகையாகப் படைத்தும், காத்தும், இவ்வகையில் பிறந்தும் இறந்தும் இளைப்புறும் உயிர்களைக் கால எல்லையில் அவ்விளைப்பு நீங்குதற் பொருட்டு ஒடுக்கியும், கால எல்லைக்கு அப்பாற்பட்டு நிற்றலின் முதல், நடு இறுதி என்று எண்ணற்கு அரியதாய் அவற்றின் அளவு கடந்து நிற்கும் பரம்பொருளின பெருஞ்செயலுக்கு வணக்கம்.

உயிர்க்கு, உலகு, உடல், கருவி ஆகியவற்றைக் கொடுத்து அவற்றின் வழி நுகரச் செய்வதே படைப்பாகும். அவ்வினையை நுகருமாறு காத்தல் காப்பாகும். இவ்வாறு வினைக்கீடாகப் பிறப்பையும் இறப்பையும் மாறி மாறிப் பெறுவதால் உயிர் இளைப்புறும். அவ் இளைப்பினால் உயிர்கள் சிறிது ஓய்வு பெறுவதற்கே இறைவன் ஒருகால எல்லையில் (சர்வ சங்கார காலத்தில்)ஒடுக்குகின்றான், 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்' என வரும் திருவாக்கால் உயிர் இளைப்புறுமாற்றை அறியலாம் இறைவன் கால எல்லைக்கு அப்பாற்பட்டவன் ஆதலின் அவனுக்கு முதல், நடு இறுதி என்ற வரையறை கூறற்

இல்லை. 'ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதி' எனக் கூறுவதும் காண்க.

(6) — முந்துற்ற

நெல்லுக்கு உமிதவிடு நீடுசெம்பில் காளிதமும்
தொல்லைக் கடல்தோன்றத் தோன்றவரும்-எல்லாம்
ஒருபுடை யொப்பாய்த்தான் உள்ளவா றுளதாய்
அருவமாய் எவ்வுயிரும் ஆர்த்தே-உருவுடைய
மாமணியை உள்ளடக்கும் மாநாகம் வன்னிதனைத்
தான் அடக்கும் காட்டத் தகுதியும்போல்-ஞானத்தின்
கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல்மாண்ட எவ்வுயிர்க்கும்-உள்நாடிக்
கட்புலனுல் காணுர்தம் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண்-முற்பால்
தனுகரணம் புவனமும் தந்(து) அவற்ருல்
மனமுதலால் வந்தவிகாரத்தால்-வினையிரண்டும்
காட்டி அதனுற் பிறப்பாக்கிக் கைக்கொண்டும்
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி.

(தெ-ரை) நெல்லுக்கு உமியும், தவிடும்; செம்பிற்கு நெடிது நிற்கும் களிம்பும் போல, கால எல்லைக்கு அப்பாற்பட்டே தொடர்ந்து வரும் தன்மையதாய்ப் பழமையான கடலில் உப்புக் கலந்திருப்பது போல உயிரோடு கலந்திருப்பதாய், இத்தகைய உவமைகளனைத்தும் தனக்கு ஒருபுடையொப்பாய் நிற்கத் தான் என்றும் நிலைபேறுடையதாய், வடிவு இல்லாததாய், எல்லா உயிர்களையும் தனக்குள் கட்டுப்படுத்தி ஒளிமிக்க நீலமணியை உள்ளடக்கி இருக்கும் பெரிய பாம்பினைப் போலவும் நெருப்பைத் தன்னிடத்து மறைத்து நிற்கும் விறகினைப் போலவும் உயிர்களின் அறிவினை மறைத்து அறியாமையைச் செய்யும் கொடுந்தொழிலுடைய ஆணவ மலத்தால், எண்ணுதற்குரிய செயலொழிந்த எல்லா உயிர்கட்கும் அவ்வவ்வுயிர்களின் விருப்பறிந்து கண்பொறியற்ற குருடர்க்குக் கைகொடுத்து உதவுமாறு கொடுத்த கோலைப்போல, பொலிவுமிக்க மாயையோடு கூட்டுவித்து அதன் விளைவால் முதற்கண் உடல், கருவி, உலகு, நுகர்வு முதலியவற்றைக் கொடுத்து, மனம் மொழி மெய்களினுல் உளவாகும் இருவினைப் பயனையும் கூட்டுவித்து அவற்றை நுகர்தற்காகப் பிறப்பினையும் உளதாக்கி அதனுல் மலநீக்கம் பெற்ற தகுதியுடைய உயிர்கட்கு, அவற்றினின்றும் மீாச்செய்து தம் பேரின்பத்தை வழங்கியருளும் பெருஞ் செயலுக்கு வணக்கம்.

ஆணவம் உயிரைப் பிணித்து நிற்பது கால எல்லைக்கு அப்பாற்பட்டது அப்பிணிப்பிற்குக் காரணம் அறிய இயலாது. நெல்லிற் குரிய உமியும் தவிடும் கால எல்லை கடந்து அதனிடத்தில் என்றும் இருப்பது போல, ஆணவமும் உயிரினிடத்துக் கால எல்லை கடந்து அதனுடனே என்றும் இருக்கும். செம்பின் நிறத்தைக் களிம்பு மறைப்பது போல, உயிரின் அறிவை ஆணவம் மறைத்து நிற்கும் கடல் வெளியில் உவர்ப்பு இருந்தும் அவ்வெளியைப் பற்ருது நீரையே பற்றி நிற்பது போல இறைவனின் அருள்வெளியில் உயிர் இருப்பினும் ஆணவம் இறைவனைப் பற்றுதற்குரிய ஆற்றலின்றி உயிரையே பற்றி நிற்கும். முற்பால்—முதற்கண். தனு-உடம்பு. சாளிதம்-களிம்பு நெல்லிடத்துள்ள உமியும் தவிடும் அதனிடத்தே நீங்கிய பின் கூடுவதில்லை. ஆனல் ஆணவமோ உயிரிடத்து என்றும் பிரிவதுமில்லை; அவ்வகையால் பின் கூடுவதுமில்லை. செம்பினிடத்துக் களிம்பு அதனுடன் தோன்றுவதில்லை; பின்னரே தோன்றும். ஆனல் உயிரினது அறிவை மறைத்து நிற்கும் ஆணவமோ, உயிரிடத்து என்றும் இருப்பதாகும். நீரைப்பற்றி நிற்கும் உவர்ப்புத் தன்மை கடல்வெளியை முழுமையாகப் பற்ருதாயினும் ஓராற்ருன் அதன் தன்மை கலந்து நிற்கும். ஆனல் உயிரிடத்து நிற்கும் ஆணவமோ இறைவனைச் சிறிதும் தகைக்க வல்லதல்ல. ஆதலின் இவ்வுவமைகள் ஒருபுடையொப்புமையாய் வந்தன என்ருர். வன்னி-விறகு. காட்டம்-நெருப்பு. ஞானத்தின்-உயிரின். மாயை மயக்கம் தருமேனும் மலப்பிணிப்பகலத் துணையாயும் நிற்றலின் 'பொற்புடைய மாயை' என்ருர் 'விடிவாமளவும் விளக்கனைய மாயை' எனத் திருவருட்பயனில் இவ்வாசிரியர் கூறுமாறும் அறிதற்குரியது.

(14) — நாட்டுகின்ற

எப்பிறப்பும் முற்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துட்-கர்ப்பமாய்ப்
புல்லிற் பனிபோற் புகுந்திவலைக்(கு) உட்படுங்கால்
எல்லைப் படாஉதரத்(து) ஈண்டியதீப்-பல்வகையால்
அங்கே கிடந்த அநாதிஉயிர் தம்பசியால்
எங்கேனுமாக எடுக்குமென - வெங்கும்பிக்
காயக் கருக்குழியில் காத்திருந்தும் காமியத்துக்(கு)
ஏயக்கை கால்முதலாம் எவ்வுறுப்பும்-ஆசறவே
செய்து திருத்திப்பின் புயோகிருத்தி முன்புக்க
ஐயவழி யேகொண்(டு) அணைகின்ற-பொய்யாத
வல்லபமே போற்றி.

(தெ-ரை) நூல்களில் எடுத்துக் கூறப்படுகின்ற எல்லாப் பிறப்புக்களையும் அவ்வவ்வுயிரும் முன் செய்த இருவினைக்குத் தகப் பெறுமாறு திருவுளத்தெண்ணி அவ்வாற்றான் வந்த பிறப்பு வகைகளில் நற்றவ மிகுதியான் வரும் மானிடப் பிறப்பில் அழகுமிக்க தந்தையும் தாயும் கூடும் இன்பப்புணர்ப்பில் தாயினுடைய கருவில் தந்தை, புல் நுனியில் தங்கும் பனித்திவலை போன்ற விந்துவை விடும்பொழுது அதற்குள் உயிரை அடக்கிக் கருக்குழியில் அதனை இருத்தித் தாய் வயிற்றில் உள்ள அளவற்ற வெப்ப மிகுதியால் அது அழிவுறுபவலும் அவ்வயிற்றுக்குள் பலவாகப் பரந்து கிடக்கும் உயிர்ப்பூச்சகள் தமக்குரிய பசியால் எவ்வகையிலேனும் உண்டுவிடுமோ எனக்கருதி வெப்பமிகுந்த நரகனைய கருக்குழியில் காத்திருந்தும், அவ்விடத்து அவ்வுயிரின் வினைக்கேற்பக் கைகால் முதலிய உறுப்புக்களைக் குற்றமற உளவாக்கி அவற்றை அழகு பொருந்தத் திருத்தி பின்பு அவ்வுடலை எடுத்து ஒடுங்கியிருக்குமாறு செய்து பத்துத் திங்கள் வரையிலும் அதன் வளர்ச்சிக்குரிய உணவையும் நல்கிப் பின்பு நிலத்தில் பிறக்கும் பொழுது இருகைகளும் தலைமீதுகுவிந்த நிலையில் தலைகீழாய் வருமாறு செய்து மூன்பு புகுந்த சிறுவழியைப் பெருவழியாக்கி உயிர் துன்புறு வண்ணம் அதனை அணைத்து வெளிச் செலுத்தும் மெய்ம்மையாகிய அருள் திறத்திற்கு வணக்கம்.

நாட்டுகின்ற- ஆகமங்களிலும் அதன் வழிவந்த நூல்களிலும் சொல்லப்படுகின்ற. 'ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம், நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச்-சீரிய பந்தமாம் தேவர் பதினாலு அயன்படைத்த, அந்தமில் சீர்த்தாவரம நாலைந்து' என்னும் பாடலால் பிறப்பு வகை எண்பத்து நான்கு நூறாயிர மாதல் விளங்கும். ஐம்பெரும் குரவராவார் தந்தைதாய் உள்ளிட்டோர் ஆதலின் 'பொற்புடைய தந்தை தாய்' என்றார். தந்தையிடத்திருந்து வெளிப்படும் விந்திற்குப் புல் நுனிமேல் நிற்கும் பனித்திவலை உவமையாதல், 'அறுகு நுனி பனி அனைய சிறிய துளி பெரியதொரு ஆகமாகியோர் பாலரூபமாய்' எனவரும் அருணகிரியார் திருவாக்காலும் அறியலாம். வயிற்றில் உயிர் அணுக்கள் (கிருமிகள்) பல உளவாதலை இக்கால விஞ்ஞான உலகமும் ஏற்றுக் கொண்டதொன்று. இஞ்ஞானப் பனுவலில் அவ்வுண்மை . சுட்டப்படுதல் அறிதற்குரியது. வெம்குப்பி- வெப்பமும் தூய்மையின்மையும் ஒருங்கு அமைந்த நரக வகை, வயிற்றினகத்துள்ள கருக்குழியும் அன்னதாகலின் இதற்கு அது. உவமையாயிற்று. காமியத்துக்கியைய-வினைக்குத்தக, ஆசு- குற்றம் உருவின்மிக்கதோர் உடம்பது பெறுதற்கும் நல்வினை

வேண்டுமென்பதாம். யோகு இருத்தி-தலைமீது குவிந்த கையுடன் இருக்கச்செய்து. வரும் வழிக்கேற்பக் கருவிகள் அமைய வேண்டியிருத்தலின் இவ்வாறு இருக்கச் செய்ததும் அவன் கருணையேயாம் ஐயவழி-சிறிய வழி.

மானிடப் பிறவி வாய்ப்பது பற்றியும், வாய்க்குங்கால் தாய் வயிற்றில் கருக்கொள்வது முதல் பத்தாவது திங்களில் குழவியாக உயிர்க்கும் வரை அதற்கு ஏற்படும் அழிவு பற்றியும் மணிவாசகப் பெருமான் தெளிவாக அருளுவர். 'யானை முதலா எறும்பு ஈறாய ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும் மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து, ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும், ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும் இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும், மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும். ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும். அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும். ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும் ஏழு திங்களில் தாழ் புவி பிழைத்தும் எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும். ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும் தக்க தசமதி தாயொடு தான்படும், துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்' என வருவன ஆழ எண்ணுதற்குரியதாம். 'ஈனமில் கிருமி' என இவர் குறித்திருப்பதற்கேற்ப 'அங்கே கிடந்த அநாதி உயிர்' என உமாபதி சிவம் குறித்திருப்பதும் ஒப்பிட்டுணர்தற்குரியதாம். இவ்வாறு உடனிருந்து உதவும் பெருங்கருணையை ஈண்டு விரித்துக் கூறிய மணிவாசகர், பின் 'உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து உளம் மன்னிக் கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையில் ஆண்டுகொண்ட' எனச் சுருங்கவும் அருளுவர். பொய்யாத வல்லபம் தவறாத செயல் திறன்: ஒவ்வொரு நிலையிலும் இறைவனின் கருணைப்பெருக்கு முன்னின்று அருளுதலின் 'பொய்யாத வல்லபம்' என்றார்.

அம் மாயக்கால் தான்மறைப்ப
நல்ல அறிவொழிந்து நன்குதீ-தொல்லையுரு
அக்காலந் தன்னிற் பசியை அறிவித்(து) அழுவித்(து)
உக்காவி சோரத்தாம் உள் நடுங்கி-மிக்குஓங்கும்
சிந்தை உருக முலைபுருகுந் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப் பக்கண்டு வாழ்ந்திருப்பப்-பந்தித்த
பாசப் பெருங்கயிற்றாற் பல்லுயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறி போற்றி.

(தெ-ரை) தாய் வயிற்றை விடுத்து நிலவுலகில் பிறந்தவுடன் உடற்குக் காரணமான மாயை பெருவளியென அலைத்து மயக்க முன் கருவிலிருந்த பொழுது இப்பிறவித் துயரை நீக்கிக்கொள்ள வேண்டுமென்றிருந்த அந்நினைவையும் மறந்து நலம் தீங்கு என்னும் துன்பத் தொடர்பால் நல்லறிவு அதனைப் பிறர்க்கு அறிவிக்குமாறு அழச்செய்து அவ்வாறு அழுதலைக் கண்ட தாய், உயிரும் உருகுமாறு மீதூர்ந்த அன்பினால் மனம்நடுங்கி, அதன்வழி மனமிரங்கி மார்பு வழி ஒழுகும் இன்சுவைத்தாய பாலை அக்குழவி வாய் வைத்துக் குடித்து முகம் மகிழ இருப்பது கண்டு தாய் மகிழுமாறு செய்வித்து, இவ்வாறு தாய் மகவென வைத்த பெரும் பற்றாகிய கயிற்றினால் பல்லுயிர்களையும் பிணித்து அவரவர்க்கும் பற்று மீதூருமாறு செய்வித்தருளும் அறநெறிக்கு வணக்கம்.

மாயக்கால்-மாயையாகிய பெருங்காற்று. அம்மாயக்கால் எனச் சுட்டியது முன் அறிந்தமையையும் அதன் வலிமையையும் குறிக்கவாம். உடல், உலகு முதலியவற்றால் மாயை மயக்குதலின் 'மாயக்கால் தான் மறைப்ப' என்றார் அம் மாயை உயிரைப் பல்லாற்றானும் மயக்கி வெற்றிகொள்ளும் திறத்ததாகலின் அதனைப் பெருவளியாக (காற்று) உருவகித்தார். அவ்வாறு அது மயக்குதலை 'மையல் மானுடமாய் மயக்கும் வழி" எனச்சேக்கிழார் கூறுமாற்றானும் அறியலாம் நன்கு தீது-நலந்தீங்குகள். தீது என்பது ஈண்டு தீ என நின்றது. தொல்லையுறு-துன்பப்படுகின்ற. உயிர் அறிவிக்க அறியும் தன்மையதாதலின் அதற்குளவாய பசியையும் அதனை வெளிப்படுத்தும் அழுகையையும் இறைவன் அறிவிக்க வேண்டுவதாயிற்று. ஆவி உக்கு-உயிர்நெகிழ்ந்து. அழுங்குழந்தையிடத்து அன்புகொளச் செய்வதும், அதன் வழித் தாயிடத்துத் தீம்பால் பெருகச் செய்வதும் இறைவனின் அருட் கருணையேயாம் பந்தித்த-கட்டுப்படுத்துகின்ற. உயிரினங்கள் பலவற்றையும் ஒன்றோடொன்று இயையுமாறும் இணைந்து வாழுமாறும் செய்வது இறைவனின் கருணையேயாம் என்பார் "பல்லுயிரும் பாலிக்க நேசத்தை வைத்த நெறி போற்றி' என்றார். பாலிக்க-வளர.

உயிர் கருவிலிருக்கின்ற பொழுது பிறவி வேண்டாவென எண்ணும். குழவியாய் நிலவுலகில் வந்த பின் அதனை மறந்து விடும் என்பார் 'நல்ல அறிவொழிந்து" என்றார். தாய்கருவில் வாழ்குழவிதாமெல்லாம் வேண்டுவது தூய பிறவாமை ஒன்றே சோமேசா' எனச் சிவஞான முனிவர் அருளுவதும் காண்க.

"ஆசு அற்ற

பாலைப் பசும்பதத்தும் பாலனும் அப்பதத்தும்
நாளுக்கு நாள்சகல ஞானத்து-மூள்வித்துக்
கொண்டாள ஆளக் கருவிகொடுத்(து) ஒக்கநின்று
பண்டாரியான படி போற்றி"

(தெ-ரை) குற்றமற்ற குழவிப் பருவத்தும், இளஞ் சிறுவனாய் வளரும் பருவத்தும், நாளுக்கு நாள் மேலும் வளரும் பருவத்தும் அவ்வப் பருவத்துக்கு ஏற்ப முழுமையான அறிவைக் கொடுத்தும் அவ்வறிவு நலங்களுக்கேற்பச் செயற்படும் கருவி நலங்களைக் கொடுத்தும் உடனின்று உதவியருளும் அருட் செல்வத் தகைமைக்கு வணக்கம்.

ஆசு-குற்றம். பாலைப்பசும்பதம்-குழவிப் பருவம். ஒக்கநின்று-உடன்நின்று. பண்டாரம்-செல்வம்: அருட்செல்வம். அதனை உடையான் பண்டாரி ஆவன்.

25 "தண்டாத

புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்
அன்புசேர் கின்றன கட்டுஐந்தாக்கி-முள்புள்ள
உண்மை நிலைமை ஒருகால் அகலாது
திண்மை மலத்தால் சிறையாக்கிக்-கண்மறைத்து
மூல அருங்கட்டில் உயிர்மூடமாய் உள்கிடப்பக்
காலம் நியதி அது காட்டி-மேல்ஓங்கும்
உந்திவியன் கட்டில் உயிர்சேர்த்துக் கலைவித்தை
அந்த அராகம் அவைமுன்பு-தந்த
தொழில் அறிவு இச்சை துணையாக மானின்
எழிலுடைய முக்குணமும் எய்தி-மருளோடு
மன்னும் இதயத்தில் சித்தத்தால் கண்டபொருள்
இன்ன பொருள்என்று இயம்ப வொண்ணு-அந்நிலைபோய்க்
கண்டவியன் கட்டில் கருவிகள் ஈர்ஐந்தொழியக்
கொண்டுநிய மித்துஅற்றை நாள்கொடுப்ப-பண்டை
இருவினையால் முன்புள்ள இன்பத்துன் பங்கள்
மருவும்வகை அங்கே மருவி-உருவுடன்நின்று
ஓங்கு நுதலாய ஓலக்க மண்டபத்தில்
போங்கருவி யெல்லாம் புகுந்துஈண்டி-நீங்காத
முன்னை மலத்து இருள்உள் மூடா வகையகத்துள்

துன்னும் இருள் நீக்கும் சுடரேபோல் — அந்நிலையே
சூக்கச் சுடர் உருவிற் பெய்து தொழிற்கு உரியர்
ஆக்கிப் பணித்த அறம்போற்றி.

(தெ-ரை) நீங்காத இழிவு மிகுந்த தசைப் போர்வையாலாய புழுக் கூடாகிய பெரிய வீடென்னும் உடம்பின்கண் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்னும் ஐந்து கட்டுக்களை உளவாக்கி, உயிர்க்குக் கால எல்லைக்கு அப்பாற் பட்டே உளதாகின்ற உண்மை நிலையான ஆணவ மறைப் பினின்றும் சிறிதும் நீங்காமல் வன்மையுடையதாய் உயிரைச் சிறைப்படுத்தி நிற்கும் மூலாதாரமாகிய வீட்டில் உயிர் அறிவற்றுக் கிடப்ப அவ்விடத்தில் இளைப்பாறுங்காறுங் காலத்தை நியதியினால் நிறுத்தி, அதற்குப் பின் மேலோங்கி நிற்கும் கொப்பூழ் ஆகிய வீட்டில் உயிரை உயிர்ப்புக் காற்றுடன் கூடுமாறு செய்து, அவ்விடத்தே கலை, வித்தை, அராகம் ஆகிய மூன்றினாலும் உயிரது தொழில் அறிவு விருப்பம் ஆகிய மூன்றையும் எழுப்பி அதற்குத் துணையாகப் பிரகிருதி மாயையில் உண்டான அழகு பொருந்திய சாத்துவிகம், இராட்சதம், தாமதம் என்னும் முக்குணங்களையும் சேர்த்து அதற்குமேல் இருதயமாகிய இடத்தில் சித்தமாகிய கருவியுடன் கூட்டி அவ்விடத்தில் அச்சித்தத்தால் கண்ட பொருள் இன்னதென்று அறியாமல் மயங்கி நின்ற உயிரைக் கண்டமாகிய இடத்தில் சேர்த்து அவ்விடத்தில் சுவை, ஒளி முதலாய ஐந்தையும், வாக்கு, கால் முதலிய தொழிற் கருவி ஐந்தையும், மனம் புத்தி முதலிய அகக்கருவிகள் நான்கையும், உயிர்க்காற்று முதலாய காற்றுக்கள் பத்தையும், புருடனையும் கூட்டி முன்செய்த இருவினைக்கீடாக முன்புநனவிலே இன்பதுன்பங்களைத் துய்ப்பிக்கச் செய்தவாறு கனவிலும் இருவினை நுகர்வு உண்டாயதை அறிந்து அதனையும் துய்ப்பித்துப் பின்பு அதற்கு மேலாய பருவுடம்பின்கண் வளர்ந்து நெற்றியாகிய ஓலக்க மண்டபத்தில் 96 கருவிகளையும் பொருத்தி வாழுமாறு செய்வித்து முன்பிருந்தே விட்டு நீங்காது மறைந்து நின்ற ஆணவ மலமாகிய இருள் கூடாதவாறு சூக்குமம் முதலாகிய நால்வகை வாக்குகளுடன் கூட்டி ஒளி மிகச்செய்து கட்டு நிலையில் உயிரை நிறுத்தி உயிர்செய்த வினைக்கீடாகச் சுவை ஒளி முதலிய புலன்களைக் காட்டி அதன்வழி உயிர்கள் அவற்றை நுகர்வதால் யான் எனதென்னும் செருக்குற்றுத் தருக்கி நிற்ப இவ்வாறு உயிர்களை அவ்வவ்வினை வயத்ததாகுமாறு செய்யும் பேரருட் திறத்திற்கு வணக்கம்.

தண்டாத-நீங்காத உயிர், வினை நீங்குங்காறும் மாறிமாறி உடல் எடுத்தலின் 'தண்டாத புனபுலால் போர்த்து' என்றார். கண்ணுக்குப் புலனாகாத உயிரணுக்கள் பல நிரம்பியது இவ்வுடலாதலின் 'புழுக்குரம்பை' என்றார். உயிர் உய்தி பெறுதற்கு உடல் துணையாய் இருத்தலின் 'மாமணி' எனச் சிறப்பித்தார். 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்பர் திருமூலரும். உயிர் நிலைபெறுதற்குரிய இடம் ஐந்தாம். ஆதலின் அதனைக் கட்டு என்றார், நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் ஆகிய ஐந்தனுள் உயிர்ப் படங்கல் என்னும் நிலைக்குரிய மூலாதாரத்திலிருந்து படிப்படியாக மேல்எழும் நிலையில் அவ்வவ்விடத்தும் கருவிகள் கூடுகின்றன. கருவிகள் முப்பத்தைந்தும் கூடிய இடத்தில் அன்பு பெறுதற்குரிய நிலையை உயிர் பெறுகின்றது ஆதலின் 'அன்பு சேர்கின்ற கட்டு' என்றார். அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு" என்பர் திருவள்ளுவரும். முன்புள்ள உண்மை நிலைமை பலத்தால் ஒருகால் அகலாது திண்மைச் சிறையாக்கி என இயைக்க ஆணவம் உயிரிடத்து காலப் பழமைக்கு எட்டாத காலத்தேயே உள்ளது அவ்வாறு அது உயிரொடு இயைந்திருப்பது இயல்பாகவே அமைந்த நிலையாம். ஆதலின் அம்மலத்தைச் சகசமலம் என்பர். அது உயிரை ஒரு பொழுதும் விடுத்து நிற்பதில்லை. மூலாதாரத்தில் உயிர் இவ்வாணவ மலத்தால் சிறைப்படுத்தப்பட்டு ஒன்றும் அறியாத நிலையில் நிற்கும். அந்நிலையில் அறிவின்றிக் கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டு கிடக்கும். கண் மறைந்து-உயிரது அறிவை அகப்படுத்தி தன் உணர்வாகிய அறியாமையை மேலோங்கச் செய்து. மூல அருங்கட்டில்-மூலாதாரமாகிய அரிய இடத்தில் மூடமாய்-அறிவற்றதாய். மூலாதாரத்தில் அறிவற்றுக் கிடக்கும் அவ்வுயிரொடு காலம், நியதி ஆகிய இரண்டையும் கூட்டி அதற்கு மேலுள்ள கொப்பூழில் உயிரை நிலைபெறுத்துவன் இறைவன். அங்கிருக்கும் உயிரிடத்து உயிர்க்காற்று கலை, வித்தை, அராகம் ஆகிய மூன்றையும் கூட்டி அவற்றின் துணையால் செயல், அறிவு, விருப்பு ஆகியவற்றை உளவாக்குவன் அந்நிலையிலுள்ள உயிர் முக்குண வயப்பட்டுத் திரிபுணர்ச்சி பெறும். அதன்பின் அதற்கும் மேலான இதயமாகிய அறையில் அவ்வுயிரைச் சேர்ப்பிப்பன். அதனொடு சித்தத்தையும் கூட்டு விப்பன். அதுபொழுதும் உயிர் தான் கண்ட பொருளை இன்னதெனத் தெளியாது அந்நிலையில் அதற்கும் மேலாக விளங்கும் கழுத்தில் அறிவுப்பொறியும். தொழிற் பொறியும் ஆகிய பத்தும் நீங்கலாக எஞ்சிய இருபத்தைந்து கருவிகளோடும் கூட்டுவன்.

அந்நிலையில் உயிர் நுண்ணுடம்புடன் கூடி கனவில் இன்ப துன்பங்களை நுகரும். அதன்பின் அதற்கும் மேலாக விளங்கும் நெற்றியில் நிறுத்தி முன் கூட்டிய கருவிகளுடன் மேலும் பல கருவிகளையும் கூட்டி 96 கருவிகளுடன் உயிரை நிலைபெறுத்துவன். இருள் சூழாதவாறு விளக்கு வைத்தாற் போல ஆணவம் சூழாதவாறு நால்வகை வாக்குகளையும் இயைவிப்பன். கட்டுண்ட நிலையில் இருந்த உயிரைப் படிப்படியாக மேலேறச் செய்து அவ்வந் நிலைக்கு ஏற்பக் கருவிகளையும் கூட்டி உயிரைத் தொழிற் படுத்தும் இறைவனின் கருணைப் பெருக்கு வியத்தற்குரியதாகும். மானின்-பிரகிருதி மாயையின் சண்ட வியன் சட்டில்-கழுத்தாகிய அகன்ற இடத்தில். போம்கருவி எல்லாம்-உயிர் உடலொடுகூடித் துய்த்தற்குரிய கருவிகள் எல்லாம். சூக்கம்-சூக்குமம்.

35 வேட்கை மிகும்

உண்டிப் பொருட்டால் ஒருகால் அவியாது
மண்டிஎரியும் பெருந்தீ மாற்றுதற்குத்-திண்திறல்சேர்
வல்லார்கள் வல்ல வகையால் தொழில்புரிதல்
எல்லாம் உடனே ஒருங்கிசைந்து-சொல்காலை
முட்டாமற் செய்வினைக்கும் முன்செய்வினைக் கும்செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி.

(தெ-ரை) ஆசையை மிகுவிக்கும் உணவிற்காக ஒரு பொழுதும் தணியாது அவ்வப்பொழுதும் மேலோங்கி நிற்கும் பசியாகிய பெருந் தீயைத் தணிப்பதற்கு ஆற்றல்மிக்க பல்லுயிர் களும் தத்தமக்கு இயைந்த வகையால் பணிசெய்யுமாறு பணித்துச் சொல்லப்படுகின்ற காலம் தவறாது முன்செய்தவினை, செய்யும்வினை, வருவினை ஆகிய மூன்றிற்கும் நெறியான கணக்கு எழுதி அதற்கேற்ப அவரவரும் நுகருமாறு செய்வித்தருளும் திறத்திற்கு வணக்கம்.

பொறிவழிப் பெறும் புலன்நுகர்வு உணவினால் ஏற்படுவ தாகும். மிகு உணவினால் நோயும் காமமும் பெருகும். ஆதலின் 'வேட்கை மிகும் உண்டி' என்றார். 'சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்' என உரைத்த அறமும் காண்க. எத்துணை மண்டி எரியும் தீயையும் முழுமையாக அவித்துவிட முடியும். ஆனால் பசித்தீயை அவ்வப்பொழுது அவித்துக் கொள்ள இயலுமேயன்றி நிலையாக அவித்துக் கொள்ள இயலாது. ஆதலால் தீயினும் கொடியது பசியாகும். இவ்வுணவை எத்துணையோ வழிகளில் முயன்று பெறுகின்றனர். அத்துணைவகையும் அடங்க 'வல்லார்கள் வல்ல வகையால்' என்றார். செய்தவினை, செய்யும்வினை, வருவினை ஆகிய மூன்றையும் நெறி பிறழாதும், காலம் தவறாதும் கணக்

கெழுதி வைக்கும் கருணையாளன் இறைவன் ஆவன். 'தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று அழுது காமுற்று அரற்றுகின்றாரையும், பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும், எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே' எனத் திருமுறை நுவலுவதும் ஈண்டு எண்ணற்குரியதாம்.

39 நட்டுஓங்கும்

இந்நிலைமை மானுடருக்கே யன்றி எவ்வுயிர்
மன்னுயிர்க்கும் இந்த வழக்கேயாய்-முன்னுடைய
நாள்நாள் வரையில் உடல்பிரித்து நல்வினைக்கண்
வாழ்நாளின் மாலாய் அயனுகி-நீள்நாகர்
வானுடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானு விதத்தால் நலம்பெறும்நாள்-தான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம் வெங்குருவின் பால்காட்ட-இற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை என்றெடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச்-சொல்லி இவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்து வீர்என்று
வெய்துற்று உரைக்க விடைகொண்டு-மையல் தரும்
செக்கினிடைத் திரித்தும் தீவாயில் இட்டெரித்தும்
தக்க நெருப்புத்தூண் தழுவுவித்தும் - மிக்கு ஓங்கும்
நாராசம் காய்ச்சிச் செவிமடுத்தும் நா அரிந்தும்
ஈரா உன் ஊனைத்தின் என்றடித்தும்—பேராமல்
அங்கு ஆழ் நரகத்து அழுத்து வித்தும் பின்னும்தம்
வெங்கோபம் மாருத வேட்கையராய்—இங்கொருநாள்
எணணிமுதற் காணுத இன்னல் கடுநரகம்
பன்னெடுநாள் செல்லும் பணிகொண்டு—முன்நாடிக்
கண்டுகடன் கழித்தல் காரியமாம் என்றுஎண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார்—மண்டு எரியில்
காய்ச்சிச் சுடஅறுக்க கண்உரிக்க நல்நிதியம்
ஈய்த்துத்தாய் தந்தைதமர் இன்புறுதல்—வாய்த்தநெறி
ஓடிய தேரின்கீழ் உயிர்போன கன்றுலே
நீடுபெரும் பாவம் இன்றே நீங்கும்என—நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
தஞ்சனைய சிந்தை நமன்தூதர்—வெஞ்சினத்தால்
அல்லல் உறுத்தும் அருநரகம் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி.

(தெ-ரை) தத்தம் வினைக்கேற்பத் துய்த்து வரும் இந்நிலைமை மக்கட்கேயன்றி எண்ணிறந்த பல உயிர்களுக்கும் ஒரு நெறியேயாய் அமைத்து இத்துணையென வரையறுக்கப்பட்ட கால முடிவில் உடலை விடுத்து உயிர் பிரியுமாறு செய்து நல்வினையைத் துய்க்கும் அமையத்துத் திருமால், பிரமன், இந்திரன் முதலிய இறையவர் பதங்களை வழங்கிப் பல்வேறு வகையான உடற்கினிய நுகர்வுகளை நுகர்வித்தும் தீவினைப் பயனைத் துய்க்கும் அமையத்து அவ்விடத்து வாழ்ந்திருக்கும் உயிர்கள் அவ்வவ்வுடம்பை விடுக்குமாறு இயமனின் ஏவலர்கள் விரைந்து வந்து பற்றித் தமது கொடுமையான தலைவனிடத்து உய்க்க அவ்வியமனும் உயிர்களைப் பார்த்து இரங்கிப் பாவிகளே இன்று வரை பிறவாமை வேண்டும் பேற்றி நுமக்கு ஏற்படவில்லையோ! என விருப்பமிக்க தன் இன்சொற்களைச் சொல்லிப் பின் இவர்கள் செய்திருக்கும் வினைக்கேற்ப ஒறுப்பீராக என ஆணையிட அவ்வாணையை ஏற்றுக்கொண்ட ஏவலர்கள் துன்பம் பெருகுமாறு செக்கில் இட்டு ஆட்டியும், கொடிய நெருப்பில் இட்டு எரித்தும் பெரிய நெருப்புத் தூணினைத் தழுவுமாறு செய்வித்தும் இருப்புக்கோலைக் காய்ச்சிக்காதினில் நுழைவித்தும், நாவினை அரிந்தும், அவரவரின் தசையை அரிந்து அவரவரைத் தின்னுமாறு செய்வித்தும், நீங்காத கொடு நரகங்களில் அழுத்துவித்தும், பேலும் தன் சினம் பொருதவராய் ஒருநாள் போல்டலராளும் துன்பம் தருகின்ற கொடிய நரகங்களில் மேலும் பல நாட்கள் இருத்துமாறு இயமனின் ஏவலர்கள் பணிசெய்யுமாறு பணித்து உலகத்தில் பெற்றோர்கள் தம் பிள்ளைக்கு இருக்கும் நோய் மிகுதியை நன்கு ஆராய்ந்தறிந்து அந்நோய் தீருமாறு அதற்கு ஏற்ற முறைமை செய்வது கடமை என உணர்ந்து அந்நோய் தீர்க்கும் மருத்துவர்பால் ஒப்புவிக்க, அவரும் அந்நோயின் குறிப்பிற்கேற்பப்பரந்தநெருப்பில் காய்ச்சிய இருப்புக்கோலினல் சுடவும், அறுக்கவும், கண்படலத்தை உரிக்கவும் இவ்வாறு பல படியாகத் துன்பம் தரும் முறையைச் செய்தாலும் அவற்ருல் அம்மகவு வருந்தினுலும் நோய் தீருவதை உளங்கொண்டு அம்மருத்துவர்க்கு நிரம்பப் பொருள் வழங்கி இன்புறுதல் போலவும், அறநெறியில் நின்ருெழுகிய மனுவரசன் தன்மகன் ஒட்டிய தேரின் கீழ் இடைப்பட்டு உயிர் நீங்கிய பசுங்கன்றின் பெரும் பாவத்திற்கு அவன் ஆளாகாது அப்பாவம் அவனிடத்தினின்றும் நீங்க வேண்டுமெனக் கருதி அதற்கென ஆய்ந்த தன் அறிவினல் தன் மைந்தனையும் தேர்க்காலில் இட்டு ஊர்ந்து கொன்ற அவ்வரசனின் அறநெறி போலவும், நஞ்சனைய மனமுடைய இயமனின் ஏவலர் சினம்மிகுந்து உயிர்களை இத்தகைய

அல்லற்படுத்தவும் கொடியநரகத்தில் உய்ப்பவும் அவை அனைத்தும் உயிர்களின் வினை நீக்கத்திற்கேயாம் என மகிழ்ந்து நிற்கும் இறைவனின் மறக்கருணைக்கு வணக்கம்.

உயிர் இருவினைக்கு ஏற்பப் பொருந்தி வாழுவதாகலின் 'நட்டு ஓங்கும்' என்றார். மூன் உடையநாள். இத்துணை கருவிலேயே ஆண்டுகள் இது வாழும் என வரையறுக்கப்பட்ட காலம். நாள் வரையில்-வாழ்நாள் முடிவில். நல்வினைக்கண் வாழ்நாளின் நல்வினைப் பயனை நுகர்தற்குரிய வாழ்நாளில். நல்வினைப் பயத்தால் மனிதரினும் தேவர்க்கு வாழ்நாள் நீடித்தலின் "நீள் நாகர்" என்றார். வானுடர்கோ என்பது தேவேந்திரன் என்னும் பெயர்பட நின்றது. நானுவிதத்தால்-பல் வேறுவகையால். ஒருவருக்கு வாழ்நாள் முடிந்துழி அவர்தம் உயிரை வாங்கிக் கொண்டு போதலில் தவறாதவர் என்பார் 'வெற்றிக் கடுந்தூதர்' என்றார். 'மாற்றருங் கூற்றம்' எனத் தொல்காப்பியம் கூறுவதும் காண்க. 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்றும் 'பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு' என்றும் திருவள்ளுவர் அருளுவர்; ஆதலின் அப்பிறவாமையை முன்னமேயே வேண்டிப் பெற்றிருக்க வேண்டும் அவ்வாறன்றிக் காலம் தாழ்த்திய இந்நிலையிலும் அதனை வேண்டாதிருப்பது இரக்கத்திற்குரியது· 'இற்றைக்கும் இல்லையோ பாவி பிறவாமை' என்னும் தொடர் அவ்விரக்கம் தோன்ற நிற்பதாகும். உயிர் தாம் தாம் செய்த வினைகளுக்கு ஏற்ப நிரயத் துன்பங்களின் நிலை அமையும் அதனையே ஆசிரியர் செக்கில் இட்டு ஆட்டுவது முதல் நரகத்து அழுத்துவித்தல் ஈருகப் பலபடக் கூறுகின்றார். பிறன்மனை நயந்தார்க்கு நெருப்புத் தூணைத் தழுவுமாறு செய்விப்பர். "காதலான் கரிந்து நையக் கடியவே கனைந்து கன்றி, ஏதிலான் தாரம் நம்பி எளிதென இறந்த பாவத்து, ஊதுலை உருகவெந்த ஒள்ளழற் செப்பு பாவை ஆதகா தென்னப்புல்லி அலறுமால் யானை வேந்தே"(சீவக-2769)

'வன்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரம் என்றிவற்றை, நம்பினர் இறந்தால் நமன்தமர் பற்றி எற்றி வைத்து எரிஎழுகின்ற, செம்பினல் இயன்ற பாவையைப் பாவி தழுவென மொழிவதற்கு அஞ்சி, நம்பனே வந்து உன் திருவடி அடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்'-(பெரிய திரு:1-6-4) எனச் சான்றோர்கள் கூறுமாற்றான் இவ்வுண்மை அறியலாம். ஆழ்நரகம்-மிக ஆழமான நரகம். அந்நரகம், இருள் சூழ்ந்தும் தன்பால் வந்தாரை எளிதில் விடாதும் இருப்பதாகும். "இருள் சேர்ந்த இன்னா உலகம்" "அள்ளத்தல்செய்யாது அளறு"

எனத் திருவள்ளுவர் கூறுமாற்றான் இவ்வுண்மை அறியலாம். தாம்தாம் செய்யும் வினைக்கேற்ப இத்தகைய கொடுநகுன் பங்களைத் துய்த்தல் உறுதியாதலின் அறிஞர் பெருமக்கள் இதனை நினைவுபடுத்தி அறம் கூறுவாராயினர். 'கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன் பிணிக்குங்காலை இரங்குவிர் மாதோ' எனச் சங்கச் சான்றோரும் கூறுவது காண்க. கடன்-முறைமை. ஒருவருக்கு நோயுறின் அதன் இயல்பையும் அதுதோன்றற்குக் காரணமாயதையும், பின் அது நீங்கு மாற்றையும் எண்ணுதல் முறைமையாம் 'நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்பது திருக்குறள். நோய் நீக்கத் திற்காகச் சுடுதலும் அறுத்தலும் ஆகியமருத்துவமுறை அக்காலத் திருந்தன. கண் ஒளி கெடுங்கால் அவ்வொளியை மறைக்கும் திரையை நீக்கிக் காண்டற்குரியதாக்கலும் அக்காலத்து இருந்த தொன்றேயாம் இக்கால ஆங்கில மருத்துவத்திலும் சுடுதல் நீங்கலாக ஏனைய இரண்டும் இருத்தல் அறியத் தக்கது. நோயுற் றார்க்கு இம்மருத்துவ முறைகள் துன்பம் தருமேனும் அதன்பின் நோய்நீங்கப் பெறுதலின் இவ்வாறு செய்தல் இயல்பேயாம். இவ்வருஞ் செயல்கட்குப் பொருள் கொடுத்துப் பாராட்டுதலும் இயல்பேயாம். மனுவரசன், ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதையும் உணராது அவன்தன் மருமத்தில் தேரோட்டி அவன் உயிரை மாய்த்தமையும் அவன் செய்த கொடும் பாவம் நீங்கவேயாம். எனவே மருத்துவர்களும் இம்மனு வேந்தனும் செய்த செயல்கள் பார்த்தற்குக் கொடுமை போலத் தோன்றினும் உண்மையில் நோய் நீக்கமும் வினை நீக்கமும் பெறச் செய்தனவேயாம். இவ்வாற்றான் இயமன்வழி உயிர்கள் செய்த வினைக்குத்தகச் செக்கிலிட்டு அறைத்தல் முதலாய கொடுஞ் செயல்களை இறைவன் உய்த்தலும் உயிர்களின் வினை மாசு நீங்கச் செய்தனவே யாதலின் அறமேயாம்என்பது கருத்து. இதனை மறக்கருணை என்பர். 'அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை என்பதும் காண்க. இறைவனின் அருள் செயல்களுக்கு மருத்துவரையும் அரசனையும் உவமை காட்டுதல் 'மண்ணுளே சிலவியாதி மருத்துவன் அறுத்தியோடும் திண்ணமாயறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சில நோயெல்லாம் கண்ணிய கட்டிப்பாலும் கலந்து கொடுத்துத் தீர்ப்பன் அண்ணலும் இன்பதுன்பம்அருத்தியே வினையறுப்பன்" (சிவஞான சித்தியார் - சூத்திரம் 2 பாடல்-35) 'ஆணையால் அவனிமன்னன் அருமறை முறைசெய்யாரை ஆணையில்தண்டஞ் செய்தும் அருஞ்சிறை இட்டும் வைப்பன், ஆணையின் வழிசெல் வோருக் கரும்பதி செல்வம் நல்கி, ஆணையும் வைப்பன் எங்கும்

ஆணையே ஆணையே காண்' (சித்தியார் 2-31) எனவரும் அருணந்தி சிவத்தின் வாக்காலும் அறியலாம். வாய்த்த நெறி ஓடியதேர்- தேர் தான் இயங்குதற்கான வழியில் ஓடியதேர்; எனவே கன்று தன் நெறி மாறியதன்றித் தேர் தன் நெறிமாறியதன்று என்ற நயம் காண்டற் குரியது. 'அரசுலாம் தெருவில் போங்கால்' எனச் சேக்கிழார் கூறுமாறும் காண்க. வாய்த்த நெறி- இவ்வைபொழுது இத்தேர் உருளையால் இக்கன்று இறக்க வேண்டும் என அமைக்கப்பட்ட நெறி எனினும் அமையும் எனவே தேர். கன்றின் வினைவழி ஊர்ந்ததன்றி வேறன்று என்பது புலனும். இத்தகைய நயந்தோன்ற அமைத்திருக்கும்திறன் பாராட்டுதற்குரியது

53 பல்லுயிர்க்கும்

இன்ன வகையால் இருவினைக்கண் நின்றருத்தி
முன்னைய முதல்என்ன முதலில்லோன் — நல் வினைக்கண்
எல்லா உலகும் எடுப்புண்டு எடுப்புண்டு
செல்காலம்பின் நரகம் சேராமே — நல்லநெறி
எய்துவதோர் காலம்தன் அன்பரைக்கண்டு இன்புறுதல்
உய்யும்நெறி சிறிதே உண்டாக்கிப் பையவே
மட்டாய் மலராய் வருநாளில் முன்னைநாள்
மொட்டாய் உருவாம் முறைபோலக்—கிட்டியதோர்
நல்ல பிறப்பில் பிறப்பித்து நாடும்வினை
எல்லையிரண்டும் இடையொப்பில்—பல் பிறவி
அத்தமதில் அன்றே அளவென்று பார்த்திருந்து
சக்தி பதிக்தும் தரம் போற்றி.

(தெ-ரை) இதுகாறும் கூறப்பட்ட முறையினல் காத்தருளிய உயிர்கட்குக் கட்டுநிலை முடியுமளவும் இருவினைப் பயன்களை முன்னின்று துய்ப்பிக்கச் செய்து தனக்கு முன்பும் ஒரு முதல் உண்டு என எண்ணுதற்கு இல்லாத ஒப்பற்ற முதல்வனுகிய சிவபெருமான் தனது செவ்விய ஐந்தொழில்களால் எல்லா உலகிலும் மாறி மாறி உடலொடு கூடி நுகருமாற்ருன் துய்க்குமாறு செய்யும் காலத்தில், பின் நரகம் சேராதவாறு உய்யும்படி எய்தும் காலத்துத் தனது மெய்யடியார்களைக் கண்டவிடத்துத் தன்னைக் கண்டதுபோல அவ்வுயிர்கள் இன்புற்று அவர் ஏவின பணிகளை உவகையோடு ஏற்றுச் செய்யுமாறு சிறிதளவு நல் அறிவை உண்டாக்கி, அந்நல்வழியின் வழியே மெதுவாகத் தேன் நிறைந்த மலராய் மலரும் நாளைக்கு முன்னுளில் அரும்பாய் வடிவு கொண்டு இலங்குவதைப் போலத் திருவருளை அனுபவதோர் நல்ல பிறவியில் பிறக்குமாறு செய்து, 'நாட்டப்பட்ட இருவினைகளிலும் உவர்ப்புத் தோன்றி இருவினை ஒப்புநேர்ந்த

விடத்து அன்றே பல்பிறவிகளும் முடிதற்குரிய காலம்' எனத் திருவுளம் கொண்டு அக்கால வரவினைப் பார்த்து அவ்வமையத்துத் தன் அருட் பதிவைச் செய்யும் அருள் திறத்திற்கு வணக்கம்.

இன்ன வகையால்—இது காறும் கூறப்பட்ட ஒன்பது வகையான். எவ்வுயிர்க்கும் முதல்வனாய் இருக்கும் இறைவனுக்கு அவனுக்கொரு முதல்வன் இல்லை 'மேல் ஒருவன் இல்லாதான் எங்கள் இறை' என்னும் திருவருட் பயனும். நல்வினைக்கண்-உயிர்களை ஈடேற்றக் கொள்ளும் ஐந்தொழிற்கண். அவ்வைந்தொழில்களாவன படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல். அருளல் என்பனவாம். இறைவனை அடைதற்கு அவனது மெய்யடியார் வாயிலாய் இருத்தலின் 'அன்பரைக் கண்டு இன்புறுதல் உய்யும் நெறி' என்றார். மலராதற்கு முன்னைய நிலை மொட்டாய் இருப்பதாகும். அதைப் போன்றே இறைவனை அடைவதற்கு முதல் நிலை நற்பிறப்பிற் பிறப்பதாகும். நற்பிறவி என்பது ஈண்டுத் திருவருளை உணர்தற்கும் அணுகுதற்கும் ஏற்ற பிறவியாகும். நரர் பயில்தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில், விரவுதல் ஒழிந்துதோன்றல் மிக்க புண்ணியந்தானுகும் தரையினிற் கீழைவிட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து, பரசமயங்கள் செல்லாப் பாக்கியும் பண்ணுதே' எனவரும் சித்தியார்ப் பாடல ஈண்டு எண்ணற் குரியதாகும். இருவினை ஒப்பாவது இன்பத்துள் இன்பம் விழையாமலும் துன்பத்துள் துன்பம் உறாமலும் இருத்தலாம். திருவருள் ஒன்றையே பற்றி நிற்குங்கால் இந்நிலை கைவரப் பெறும். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே' எனவரும் அருளுரையும் காண்க. இந்நிலை எய்தப் பெறின் பிறவி அறும். அந்தம்-இறுதி; அந்தம் அத்தம் என்று ஆயிற்று. சத்திபதிதல்-இறைவனுடைய திருவருள் உயிரிடத்துப் பதிதல்; திருவருள் கூடுதல். இதனைச் சத்திநிபாதம் என்பர்.

59 முத்திதரு

நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின்று அறுத்தருளிப்—பின் அன்பு
மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்தருளிப்—பூவலயம்
தன்னின்று நீங்காச் சகலர்க்கு அவர்போல
முன்நின்று மும்மலம் தீர்த்து ஆட்கொள்கை-அன்னவனுக்கு
ஆதிகுண மாதலினால் ஆடுந் திருத்தொழிலும்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும்—பாதியாம்

பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும்—அச்சம்அற
ஆடும் அரவும் அழகார் திருநுதல்மேல்
நீடுருவ வன்னி நெடுங்கண் ணும்—கேடில்லயம்
கூட்டும் தமருகமும் கோல எரியகலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும்—வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுந்தாளி னும்அடியார்
உள்ளத்தி னும்பிரியா ஒண்சிலம்பும்—கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலும்
ஒன்றும்உருத் தோன்ருமல் உள்ளடக்கி—என்றும்
இறவாது இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து—நறவாருந்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதன்என்று
பேரிலா நாதன்ஒரு பேர்புனைந்து—பாரோர்தம்
உண்டி உறக்கம் பயம்இன்பம் ஒத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி.

(தெ-ரை) உயிர்கட்கு வீடுபேறு வழங்கும் நிலையில் ஒரு மலமுடைய விஞ்ஞானகலர்க்கு அவர் உள்ளத்தின்கண் ஒளி வடிவாய் நின்று அவ்வாணவ மலத்தை அறுத்து வீடுபேறு வழங்கி அருளியும், அன்பு மீதூர்ந்து நிற்கும் பிரளயாகலர்க்கு மானும் மழுவும் நாற்ருேளும் முக்கண்ணும் கொண்டு விளங்கும் தெய்வத் திருவுருவில் நின்று அவர்கள் மாட்டு இருக்கும் ஆணவம் கன்மமாகிய இருமலங்களையும் நீக்கி வீடுபேறு வழங்கி அருளியும் இந்நிலவுலகை விட்டு நீங்காதிருக்கும் சகலர்க்கு அவர்களைப் போல் மானுடவடிவுகொண்டு முன்னின்று அவர்கள் மாட்டு இருக்கும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கி வீடுபேறு வழங்கி அருளியும், ஆட்கொள்ளுதல் அம்முதல்வனுக்கு எஞ்ஞான்றும் நீங்காத அருட்குணம் ஆதலால் திருச்சிற்றம்பலத்தில் நின்று ஆடும் திருக்கூத்தும், ஒளி பொருந்திய நீலமணி போன்று இலங்கும் கழுத்தழகும், தனது வடிவில் ஒரு கூற்றைக் கொண்டு நிற்கும் பச்சை நிறம் பொருந்திய சிவகாமி அன்னையைக் கொண்டு இலங்கும் இடப்பாகமும், பவள நிறம் போல் விளங்கும் அழகிய திருச்சடைமேல் வைத்தருளும் கங்கையும், குழவித் திங்களும், அச்சமின்றி ஆடும் பாம்பும், அழகு பொருந்திய திருத்தகவு அமைந்த நெற்றியின் மீது நீண்ட வடிவு கொண்டு இலங்கும் நெருப்புக் கண்ணும், தப்பாத இசை கூட்டும் உடுக்கையும், அழகு பொருந்திய நெருப்பகலும், இடுப்பிடத்து இணைத்துக் கட்டப்பட்டிருக்கும் பாம்பாகிய கச்சும், புலித்தோல் உடையும், வீடு பேற்றில் திளைக்குமாறு

செய்தருளுந் திருவடியிலும் அடியவரது உளத்திலும் பிரியாது விளங்கும் திருச்சிலம்பும், மறைவாக உயிரைத் தன்வயப்படுத்தி ஈர்க்கும் இருவினைகளையும் வென்று அவ்வுயிர்களின் பிறப்பறுத் தற்காகக் கட்டி இருக்கும் வீரக்கழலும் ஆகிய அடையாளங்கள் அனைத்தையும் வெளிக்காட்டாது உள்ளே அடக்கி என்றும் நீங்காத பேரின்பப் பெருவாழ்வில் எம்மை இருத்துதற்காக இதுகாறும் பிறவாத முதல்வன் இன்று பிறந்து வந்தான் எனும்படி தேனிறைந்த மாலையை அணிந்திருக்கும் மார்பினை உடைய மறைஞானசம்பந்தன் என்று இதுகாறும் ஒரு பெயரில்லாதவன் ஒரு திருப்பெயரையும் ஏற்று உலகினரின் உணவு, உறக்கம், அச்சம், நுகர்வு ஆகியவற்றோடு தாமும் ஒத்து ஒழுகி எமை ஆட்கொண்டு மகிழ்ந்த அரும் பண்பிற்கு வணக்கம்.

ஒரு மலமுடையாரை விஞ்ஞானகலர் என்றும், இரு மலம் உடையாரைப் பிரளயாகலர் என்றும், மும்மலம் உடையாரைச் சகலர் என்றும் கூறுவர். ஒரு மலமுடையார்க்கு இறைவன் உள் நின்று அருளுவன். இருமலம் உடையார்க்குத் தன் தெய்வத் திருவுருக்கொண்டு முன்னின்று அருளுவன். மும்மலம் உடை யார்க்கு அவர்களைப்போல வடிவுகொண்டு குருவாக வந்தருளுவான். இறைவனே குருவாக வரும் முறைமை பற்றி ஆசிரியர் இறை வடிவைப் பலவாறு விரித்துக் காட்டி அவ் விறைவனே மறைஞான சம்பந்தன் என்னும் பெயர் கொண்டு தமக்குக் குருவாக எழுந்தருளினன் என்று அருளுகின்ளூர். மணிமிடற்றுச் சுந்தரம்-அழகிய கழுத்தழகு. தாம் நஞ்சுண்டு உயிர்களைக் காத்தமை ஈண்டு அழகெனப் போற்றப் பெற்றது. பச்சை; ஈண்டு அந்நிறமுடைய அன்னையைக் குறித்தது. லவத்த என்பது எதுகை நோக்கித் திரிந்தது. இலயம்-தாளம்பட இசைக்கும் இசை. இறைவனது திருவடியே பிறவி அறுக்கும் பெற்றியது, ஆதலின் 'வீட்டின்ப வெள்ளத்து அழுத்திவீடும் தாள்' என்ளூர். 'முத்தி நான்ற மலர்ப் பதத்தே நாடு' என வரும் திருவாக்கும் காண்க. ஞானியர்தம் உள்ளத்து இறைவனது திருச்சிலம்பு ஓசை ஒலிக்கும். ஆதலின் இறைவனது தாளிலும் அடியாரது உள்ளத்திலும் நீங்காத திருச்சிலம்பு என்ளூர். 'திருச்சிலம்பு ஓசை ஒலி வழியே சென்று நிருத்தனைக் கும்பிடு என்று உந்தீபற' எனவரும் திருவாக்கும் காண்க. இருவினைகளும் உயிரைத் தன்வழி ஈர்ப்பதில் ஒரு தன்மைத்தாம். தத்தம் தீங்கு தோன்ருதவாறு ஈர்த்தலின் 'கள்ளவினை' என்ளூர். 'கள்ளவினைப் பசும் போதக் கவளமிட' என்பர் பரஞ்சோதியாரும்.

71 மீண்டாய

ஆறுசமயப் பொருளும் அறிவித்து அவற்றில்
பேறு இன்மை எங்களுக்கே பெருக்கித்-தேறாத
சித்தம் தெளியத் திருமேனி கொண்டுவரும்
அத்தகைமை தானே அமையாமல்-வித்தகமாம்
சைவ நெறியிற் சமய முதலாக
எய்தும் அபிடேகம் எய்துவித்துச்-செய்யதிருக்
கண்ணருளால் நோக்கிக் கடியபிறப் பாற்பட்ட
புண்ணும் இருவினையும் போய் அகல-வண்ணமலர்க்
கைத்தலத்தை வைத்தருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை யெல்லாம் விரித்தோதி-ஒத்தொழுகும்
சேண் ஆர் இருள்வடிவும் செங்கதிரோன் பால்நிற்பக்
காணு தொழியும் கணக்கேபோல்-ஆணவத்தின்
ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலைபோற்றி.

(தெ-ரை) தருக்குச் செறிந்த புறச்சமயம் ஆறின் பொருளையும் அறிவித்து அவற்றால் பயன் இன்று என அறியும் பேற்றை உளவாக்கித் தெளிதலில்லாத சித்தம் தெளியுமாறு திருமேனி கொண்டு எழுந்தருளியதோடு அமையாமல் மேதகவு அமைந்த சைவப் பெருநெறியில் தலைப்படுமாறு சமயம் முதலாக அபிடேகம் ஈறாக உள்ள தீக்கை வகைகளையும் செய்தருளிச் செவ்விய திருக்கண் நோக்கருளி கொடிய பிறப்பினால் பட்ட துன்பமும் இருவினையும் நீங்குமாறு அழகு பொருந்திய தாமரை மலரனைய திருக்கைகளைத் தலைமீது வைத்தருளிக் குழைதலின்றிக் கல் போன்றிருக்கும் நெஞ்சை உருகுமாறு செய்து இறை உயிர் தளை ஆகிய முப்பொருள்களின் இயல்பையும் அறிவுறுத்தி முழுமையாக விண்ணை மறைத்து நிற்கும் இருள் வடிவும் அவ்விண்ணில் கதிரவன் தோன்ற அதன்கண் அடங்கிக் காணப் படாது நிற்றல் போல என்னைப் பற்றி நிற்கும் ஆணவத்தின் நிலை பேறு அழியாமலும் என்னைப் பற்றுமலும் நிற்கச் செய்யும் நெறி முறைக்கு வணக்கம்.

புறச் சமயங்கள் ஆறும் வீடு பேற்றிற்கு ஆளாக்காது வெறும் மிடுக்கு ஒன்றுமே பற்றி நிற்றலின் 'மிண்டாய ஆறு சமயம்' என்றார். அவ் அறுவகைச் சமயங்களாவன தருக்கம், மீமாஞ்சை ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன. பொருள், கல்வி, மனைவாழ்வு முதலியவற்றைப் பற்றி நிற்கும் சித்தம் அவ்வவற்றிலும் பற்றியும் விடுத்தும் நிற்றலின் 'தேறாத

சித்தம்' என்றார். 'வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி யெனும் பித்த உலகில் பிறப்போடு இறப்பெனும், சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த, வித்தகத் தேவர்க்கே சென்றூதாய்க் கோத்தும்பீ' எனவரும் திருவாக்கும் காண்க 'சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதில் சார்சிவமாம் தெய்வத்தின் மேல் வேறு தெய்வமில்லை' ஆதலின் அதன் மேம்பாடு விளங்க 'வித்தகமாம் சைவ நெறி' என்றார். தீக்கை என்பது அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருவது என்று பொருள்படும். அது சமய தீக்கை, விசேட தீக்கை, நிருவாண தீக்கை, அபிடேக தீக்கை, நயன தீக்கை, பரிச தீக்கை, மானச தீக்கை, வாசக தீக்கை, சாத்திர தீக்கை, யோக தீக்கை எனப்பலவகைப்படும். சமய தீக்கையாவது ஒருவன் தன்னைச் சைவ சமயத்தவன் எனச் சொல்லிக்கொள்வதற்கு உரிமைப் படுத்துவதாகும். திருவைந் தெழுத்தைக் குருவின் வழி அருளப்பெற்று நாள்தோறும் ஓதி வருதலும், திருக்கோவில் வழிபாடு செய்தலும் இதன் பயனாக விளையத்தக்கதாம். விசேட தீக்கையாவது முற்கூறிய சமய தீக்கையைப் பெற்று அதன் வழிப் பயிற்சிபெற்ற ஒருவனுக்குச் சிவவழிபாடாற்ற உரிமை அளிப்பதாம். குருவின் வழி இச்சிவ வழிபாட்டைப் பெற்று இறைவனின் திருமகன் எனத்தகும் மேம்பாட்டைப் பெறுவது இதன் பயன் ஆகும். நிருவாண தீக்கையாவது முற்கூறிய சமயவிசேட தீக்கைகளைப் பெற்று அவற்றின் வழி ஒழுகுவார்க்கு ஞானநெறியில் செல்லுதற்கு உரிமை அளிப்பதாம். ஞான நூல்களை ஓதவும் ஓதுவிக்கவும் இதன் வழி உரிமை கிட்டும் எழுத்து, சொல், சொற்றொடர், நிலம் பொருள், செயல் என ஆறுவகையானும் உயிர் செய்யும் வினைப் பயனை ஆசிரியன் தூய்மை செய்தற்குரியது இத்தீக்கையாகும். நயன தீக்கையாவது மீன் தன் கண் நோக்கினால் தன் முட்டை களிலிருந்து குஞ்சுகளை வெளிப்படுப்பதுபோல ஆசிரியன் தன் திருக்கண் நோக்கினால் மாணாக்கனுக்குப் பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பதாகும். நயனம்-கண் பரிச தீக்கையாவது கோழி தன் அரவணைப்பால் தன் முட்டைகளிலிருந்து குஞ்சுகளை வெளிப்படுப்பது போல ஆசிரியன் தன் வலதுகையை மாணாக் கனின் தலைமீது வைத்து அருளுவதன் வாயிலாகப் பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பதாகும். பரிசம்-தீண்டுதல். மானச தீக்கையாவது ஆமை தனது நினைவினால் தன் முட்டை களிலிருந்து குஞ்சுகளை வெளிப்படுப்பது போல ஆசிரியன் தன் மனநினைவால் மாணாக்கனுக்குப் பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பதாகும். மானசம்-நெஞ்சம். வாசக தீக்கையாவது ஆசிரியன் திருவைந்தெழுத்துமுதலாய மந்திரங்களை

மாணாக்கனுக்கு அருளுவதன் வாயிலாகப் பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பதாம். சாத்திர தீக்கையாவது ஆசிரியன் தன் மாணாக்கனுக்கு மெய் நூல்களின் வழி இறை உயிர் தளை ஆகிய மூன்றன் இயல்புகளையும் உணர்த்தி அதன்வழி இறையருள் பெறுதற்கு ஆளாக்குவதாம். யோக தீக்கையாவது ஆசிரியன் தன் மாணாக்கனுக்கு யோக நெறிகளை உணர்த்தித் தன் யோக சாதனையால் மாணாக்கனின் உடலில் புகுந்து பாசத்தைக் கெடுத்து ஞானத்தை வழங்குவதாம். அபிடேக தீக்கையாவது ஆசிரியன் தனக்குப்பின் ஆசிரியனாகத் தலைமை ஏற்போனுக்கு மந்திர நீரால் திருமுழுக்காட்டி ஞானம் வழங்கும் உரிமையைக் கொடுப்பதாகும்.

உயிருக்குப் பிறந்தும் இறந்தும் வரும் துன்பம் பெரிதாதலின் அதனைக் 'கடிய பிறப்பாற்பட்ட புண்' என்றார். மெய்த்தகைமை-உண்மை நிலை. எல்லாம் என்பதால் முப்பொருளையும் அடக்கிக் கூறுதல் கருத்தாயிற்று. கதிரவன் முன் இருள் அடங்கி நிற்றல் போல அருள் ஒளியின் முன் ஆணவம் அடங்கி நிற்கும். வீடு பேற்றிலும் ஆணவம் தன் தன்மை கெட்டு நிற்பதன்றி அழிவதில்லை. ஆதலின் 'ஆணவத்தின் ஆதி குறையாத' என்றார். ஆதி—நிலைபெறு.

78 மேதக்கோர்

செய்யும் சரியை திகழ்கிரியா யோகத்தால்
எய்துஞ்சீர் முத்திபதம் எய்துவித்து –மெய்யன்பால்
காணத் தகுவார்கள் கண்டால் தமைப்பின்பு
நாணத் தகும்ஞான நன்னெறியை—வீணே
எனக்குத் தரவேண்டி எல்லாப் பொருட்கும்
மனக்கும் மலரயன் மால்வானோர்— நினைப்பினுக்கும்
தூரம்போலே அணிய சுந்தரத்தான் என்தலைமேல்
ஆரும்படி தந்து அருள்செய்த—பேராளன்
தந்தபொருள் ஏதென்னில் தான்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி –முந்தி என்தன்
உள்ளம் என்றும் நீங்காது ஒளிந்திருந்து தோன்றி நிற்கும்
கள்ளம் இன்றுகாட்டும் கழல் போற்றி.

(தெ-ரை) தகுதியுடையோர் செய்யும் சரியை, கிரியை, யோக நெறிகளுக்கு அவ்வவற்றிற்கும் உரிய பத முத்திகளைக் கொடுத்து உண்மையான பேரன்பால் தன்னைக் காண விரும்புவார் தம்மைக் கண்டு காணு முன்னுள்ள தமது நிலையை உணர்ந்து நாணுமாறு நல்கும் ஞானச் செந்நெறியைத் தகுதியில்லாத எனக்கும் தர எண்ணி எல்லாப் பொருள்களுக்கும், மனத்துக்கும் தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் அயன், திருமால் முதலாய

தேவர்களின் நினைவிற்கும் சேய்மை உடையோன் போல் நின்றும் அனைத்துப் பொருள்களிடத்தும் இடையீடின்றிக் கலந்து நிற்கும் அவனது அழகிய திருவடிகளை இழிந்த எனது தலைமீதும் சூட்டியருளிப் பேரருளை வழங்கியருளிய பெருந்தகை யோன் வழங்கிய பொருள் யாதென்னில், தான் வேறு நான் வேருய் இருந்து இதுபொழுது பொருந்தினதில்லை என்னும் வாய்மையை அறிவுறுத்திக் காலப் பழமைக்கெட்டாத காலத் திலேயே உன்னிடத்தில் ஒளிந்திருந்து நீ நம்மைக் காணுதிருக்க நாம் உன்னைக் கண்டு கொண்டிருந்தோம் என்னும் கள்ளத் தன்மையை அறிவித்து நிற்கும் திருவடிகளுக்கு வணக்கம்.

சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றற்கும் உரிய பேறு பதமுத்தியாகும். அவற்றின் பயனுகக் கிடைக்கும் ஞானத்திற்குப் பயன் வீடுபேருகும். இவற்றின் இயல்பையும் பயனையும் சிவஞான சித்தியார் மிகத் தெளிவாக விளக்கும். ஞானம் பெறுமுன்பு இருந்த அறியாமை ஞானம் பெற்ற பின்பு விளங்குதலின் அதன் முன்னைய நிலை நாணுதற்கு உரியதாயிற்று. 'அறிதொறும் அறியாமை கண்டற்ருல்' என அறநூல் நுவலுவதும் காண்க. மாலயன் முதலியோர்க்குச் சேயனுய் நிற்பதும் இல்லை. ஏனை யோர்க்கு அணித்தாய் நிற்பதும் இல்லை தன்முனைப்பற்ற நிலையில் விளங்கியும் அஃது அருத நிலையில் மறைந்தும் இருப்பதே இறைவனின் உண்மை நிலை ஆகும். ஆதலின் 'தூரம்போல அணிய சுந்தரத்தான்' என்ருர், பிறவிப் பிணிக்கு மருந்தாய் நிற்கும் அழகு தோன்றச் 'சுந்தரத்தான்' என்ருர். இறைவனை விடுத்து உயிரும், உயிரைவிடுத்து இறைவனும் என்றும் நிற்ப தில்லை. அவன் அருள்வழிப் பட்டக்கால் உணர்ந்தும் அஃது இல்வழி உணராதும் இருப்பது உயிரின் இயற்கையாகும். இவ்வுண்மை அவன் அருள்வழிப் பட்டபொழுதே அதற்கு முன் இறைவன் நிற்கும் நிலையைக் 'கள்ளம்' என்ருர்.

84 வள்ளளையால்

தன்னைத் தெரிவித்துத் தன்தாளின் உட்கிடந்த
என்னைத் தெரிவித்த எல்லையின்கண்—மின் ஆரும்
வண்ணம் உருவம் மருவும் குணமயக்கம்
எண்ணும் கலைகாலம் எப்பொருளும்—முன்னம் எனக்கு
இல்லாமை காட்டிப் பின்பு எய்தியவா காட்டி இனிச்
செல்லாமை காட்டும் செயல் போற்றி.

(தெ-ரை) தனது மிகு கருணையினால் தன்னை எனக்குணர்த்தித் தனது திருவடிக்கீழ் அடங்கி நிற்கும் என்னை உணர்த்திய அமைவைத்த, மின்னல் எனத் தோன்றி அழிகிற உடலும், அதைப் பொருந்திய குண மயக்கங்களும், அறிவு விளக்கம் தந்து நின்ற கலை. காலம் முதலிய தத்துவங்களும் எனக்கு முன் இல்லாத தனி நிலை (கேவலம்) யையும் காட்டி, பின் அவை யனைத்தும் எய்திய கட்டு நிலை (சகலம்) யையும் காட்டி, இனி அப்பொருள்களினின்று கூடாத தூய (சுத்த) நிலையையும் காட்டி அருளிய செயல் திறத்திற்கு வணக்கம்.

கருவி கரணங்களுடன் கூட்டப் படாத நிலையைத் தனிநிலை என்றும் அவற்றோடு கூட்டப்பட்ட நிலையைக் கட்டுநிலை என்றும் மேலும் அவற்றோடு கூட்டப்படாத நிலையைத் தூயநிலை என்றும் கூறுவர்.

87 எல்லாம் போய்த்
தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருள் ஆகி
எம்மைப் புறம்கூறி இன்புறுச்—செம்மை
அவிகாரம் பேசும் அகம்பிரமக் காரர்
வெளியாம் இருளில் விடாதே-ஒளியாய் நீ
நின்ற நிலையே நிகழ்த்தி ஒருபொருள்வேறு
இன்றியமை யாமை எடுத்து ஓதி-ஒன்றாகச்
சாதித்துத் தம்மைச் சிவமாக்கி இப்பிறவிப்
பேதம் தனில் இன்பப் பேதம்உறுப்-பாதகரோடு
ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்தும் காட்சிதந்து
போகமாம் பொன்தாளின் உள்புணர்த்தி-ஆதியுடன்
நிற்க அழியா நிலைஇதுவே என்றருளி
ஒக்க வியாபகம்தன் உள் காட்டி-மிக்கோங்கும்
ஆனந்த மாக்கடலில் ஆரா அமுது அளித்துத்
தான்வந்து செய்யும் தகுதியினால்-ஊன்உயிர்தான்
முன்கண்ட காலத்தும் நீங்காத முன்னோனை
என்கொண்டு போற்றிசைப்பேன் யான்.

(தெ-ரை) எல்லாப் பொருள்களும் பொய் என்று கண்டு அவற்றின் நீங்கித் தெளிந்தோம் என்றும், தமக்கு மேம்பட்ட பொருள் ஒன்று இல்லை என்றும், சைவசித்தாந்தச் செந்நெறி தமக்குப் புறம் என்றும் கூறி அலற்றால் மகிழ்ந்து முதல்வனைப் போன்றே தமக்கும் விகாரம் இல்லை என்று கூறித் தாமே பிரமம் என்பாரது வெளிப்படையான இருள்நெறியில் என்னை விடாது, அறிவாய்த் தான் நிற்கும் நிலையையும் உணர்த்தி, ஒப்பற்ற

நிலையையும் உணர்த்தி, ஒப்பற்ற பொருளாக விளங்கும் தனது இன்றியமையாமையை எடுத்து உணர்த்தித் தாம் இறைவனொடு ஒன்றுவோம் என்றும், தாமே சிவம் என்றும் கூறி இப்பிறவியிலேயே பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று மகிழாத சிவசமவாதம் கூறும் இழிதகைமையாரோடு ஒன்றுதவாறு யாண்டும் நீக்கமற நிற்கும் நிலை காட்டி, பேரின்பப் பெருவாழ்வை வழங்கியருளும் அழகிய திருவடியின்கண் ஆட்படுத்தித் திருவருளில் கலந்து நிற்கும் நிலை இதுவே என்று அருளி, தனதறிவுள் எனதறிவு அடங்கி நிற்குமாறு காட்டி மேலாக விளங்கும் பேரின்பக் கடலில் உளதாகிய அமுதத்தைத் தானே வந்து வழங்கியருளிக் காத்தருளும் தகுதியோடு, முன் உடல் கருவிகளோடு கூடிக் கட்டுண்டு கிடந்த காலத்தும் என்னைவிட்டு நீங்காது காத்தருளிய முதல்வனை எவ்வாறு யான் புகழ்ந்து போற்றுவேன்?

வெளியாம் இருளில்-வெளிபோன்று கருதத்தகும் இருளில். ஒளியாய்-அறிவாய் உயிர் இறையடிக் கீழ் இருந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவதே சைவசித்தாந்தம் கூறும்வீடுபேறாகும். 'சிவனடியைச் சேருமுத்தி செப்புவது இங்கு யாமே' எனக் கூறுமாற்ரான் இவ்வுண்மையை அறியலாம்.

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றி அவன் மெய்ஞ்ஞானப் புண்ணியநூல்-போற்றி
எங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேருய்வந்து உள்நின்ற
சம்பந்த மாமுனிபொன் தாள்.

(தெ-ரை) அழகிய தில்லை நகருக்கு வணக்கம். இறைவன் தந்தருளும் நுகர்விற்குவணக்கம். அவனது பொருள்சேர் புகழைக் கூறும் புண்ணியம் சிறந்த மெய்நூல்களுக்கு வணக்கம். கொடிய உலகியல் பற்றை விடுதற்கு என்னுள் வேருய் நின்றும் தம கருணையால் என் உள்புகுந்து ஆட்கொண்ட மறைஞானசம்பந்தர் என்னும் பெருமுனிவரின் அழகிய திருவடிகளுக்கு வணக்கம்.

தாம் ஞானம் பெறுதற்கு ஏதுவாய் அமைந்திருந்த இடம் தில்லை யாதலானும், தம் வழிபடு கடவுளாய கூத்தப் பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் அதுவாதலானும் தில்லைக்கு வணக்கம் கூறினர். மெய்யுணர்வின் பயனுகப் பெற்ற ஞானம் வீடுபேற்றிற்கு ஆளாக்குதலின் அடுத்து அதற்கு வணக்கம் கூறினர். ஞானநூல்தனை ஓதல் ஓதுவித்தல் முதலான இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை ஆதலின் அம்மெய் நூல்களுக்கு வணக்கம் கூறினர். இத்துணைக்கும் காரணமாய் இருந்தவர் தம் குருமுதல்வராதலின் அவர் தம் திருவடிகளுக்கு வணக்கம் கூறினர்

போற்றிப் பஃறொடை நிறைவுற்றது.